

# உலகளாவிய தலைமை பயிற்சிக் கூட்டம்

## குடும்பத்தை ஆதரித்தல்

பிப்ருவரி 11, 2006

பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபை

பிற்காலப்
பரிசுத்தவான்களின்
இயேசு கிறிஸ்து
சபை

TAMIL
4 02262 40418 1
26240 418

பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபையால் வெளியிடப்பட்டது
சால்ட்லேக் சிட்டி, யூட்டா

© 2006 இன்டலெக்சுவல் ரிசர்வ், இன்க்.
அனைத்து உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன
அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அச்சிடப்பட்டுள்ளது

ஆங்கில அங்கீகாரம்: 8/04
மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 8/04

# பொருளடக்கம்


அவரது நித்திய திட்டத்திற்கு திருமணம் அத்தியாவசியமானது . . . . . . . . . . . . . . . . 2
*மூப்பர் டேவிட் எ. பெட்னர்*

ஒருவரோடொருவர் அன்புகூர்ந்து பராமரிக்கும்படியான புனிதமான பொறுப்பு. . . 8
*மூப்பர் எல். டாம் பெரி*

பெற்றோர்களுக்கு ஒரு பரிசுத்த கடமையிருக்கிறது . . . . . . . . . . . . . . . . . . . . . . . 13
*போனி டி. பார்க்கின்*

பரலோக வீடுகள், நித்திய குடும்பங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 18
*தலைவர் தாமஸ் எஸ். மான்சன்*

"குடும்பம்: உலகத்திற்கு ஒரு பிரகடனம்" . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 24

# அவரது நித்திய திட்டத்திற்கு திருமணம் அத்தியாவசியமானது

மூப்பர் டேவிட் எ. பெட்னர்
பன்னிரு அப்போஸ்தலர் குழும அங்கத்தினர்



### திருமணத்தின் சீரிய கோட்பாடு

திருமணத்தையும் வீட்டையும் பலப்படுத்த அதிக முயற்சி செய்ய பிரதான தலைமையால் மிகவும் பலமாக நாம் ஆலோசனையளிக்கப்பட்டிருக்கிறோம். திருமணத்தின் பரிசுத்தம் தாக்கப்படுவதாலும் வீட்டின் முக்கியத்துவம் பலவீனப்படுத்தப்படுவதாலும் இத்தகைய அறிவுறுத்தல், உலகத்தின் இன்றைய காலத்தைவிட வேறு எப்போதுமே மிகவும் அவசியமாயிருந்ததில்லை.

சபையும் அதன் நிகழ்ச்சிகளும் திருமணத்தையும் குடும்பத்தையும் ஆதரித்து வந்தாலும் மற்றும் பொதுவாக அதில் வெற்றிபெற்றாலும், இந்த அடிப்படை சத்தியத்தை நாம் எப்போதுமே நினைவில் வைத்திருக்க வேண்டும்: வீட்டின் அல்லது அதன் செயல்களின் இடத்தை எந்த கருவியும் அல்லது எந்த நிர்வாகமும் எடுத்துக்கொள்ள முடியாது. ஆகவே அடிப்படையில் ஆண்களையும் பெண்களையும் கணவன்மார்களாகவும் மனைவிமார்களாகவும், இரண்டாவதாக சபையின் ஆசாரியத்துவமாகவும் துணை சங்கத் தலைவர்களாகவும் இன்று நான் பேசுவேன். நமது பரலோகப் பிதாவின் சந்தோஷத்தின் திட்டத்தின் அத்தியாவசியமான பாகமான நித்திய திருமணத்தைப்பற்றி கலந்துரையாட நான் நியமிக்கப்பட்டிருக்கிறேன்.

திருமணத்தின் முக்கிய கோட்பாட்டில் நாம் கவனம் செலுத்துவோம். நமது திருமண சம்பந்தமான நிலைமை அல்லது தற்போதைய நமது தனிப்பட்ட சூழ்நிலைக்கு சம்பந்தமில்லாமல், நமது நித்திய சாத்தியத்திற்கும், நாம் யாராயிருக்கிறோம் நாம் இங்கே அநித்தியத்தில் எதற்காக இருக்கிறோம் என்பதற்கான வழிநடத்துதலையும் ஆறுதலையும் நம் அனைவருக்கும் ஆதரிக்கும் நம்பிக்கையையும் யார் தருவார்கள் என்பதைப் பற்றி ஒரு நினைவுபடுத்துதலுக்கும் இது ஒரு மறுபரிசீலனையாக இருக்கிறது என்பது என் நம்பிக்கை. திருமணத்தின் கோட்பாட்டு கருத்துக்கும் தினசரி வாழ்க்கையின் உண்மை நிலைக்குமிடையில் மிகப்பெரிய வித்தியாசமிருப்பதாகத் தோன்றலாம் ஆனால் ஒருவேளை நீங்கள் அடையாளம் கண்டுகொள்வதைவிட மிக அதிகமாக நீங்கள் சிறிது சிறிதாக செம்மைப்படுகிறீர்கள்.

நித்திய திருமணத்திற்கு சம்பந்தமான கொள்கைகளை நாம் கலந்தாலோசிக்கும்போது பின்வரும் கேள்விகளை மனதில் வைத்திருக்குமாறு நான் உங்களை அழைக்கிறேன்.

*__கேள்வி 1:__ இந்த அடிப்படை கொள்கைகளை புரிந்துகொள்வதாலும் பிரயோகிப்பதாலும் எனது சொந்த வாழ்க்கையில் ஒரு சிறந்த கணவராக அல்லது ஒரு மனைவியாக, அல்லது ஒரு கணவராக அல்லது ஒரு மனைவியாக ஆயத்தப்பட நான் முயற்சிக்கிறேனா?*

*__கேள்வி 2:__ இந்த அடிப்படை கொள்கைகளை புரிந்துகொண்டு பிரயோகித்து அதனால் திருமணத்தையும் வீட்டையும் பலப்படுத்த ஒரு ஆசாரியத்துவ அல்லது துணை சங்கத் தலைவராக நான் ஊழியம் செய்கிறவர்களுக்கு நான் உதவிக்கொண்டிருக்கிறேனா?*

ஜெபத்துடன் இந்த கேள்விகளை நாம் தியானிக்கும்போது, நமது சொந்த திருமண உறவுகளையும் சபையில் நமது பொறுப்புகளையும் கருத்தில் கொள்ளும்போது, கர்த்தரின் ஆவி நமது மனங்களை தெளிவுபடுத்தி நாம் செய்யவேண்டியதும் விருத்திசெய்யவேண்டியதுமான காரியங்களை நமக்குப் போதிப்பார் (யோவான் 14:26 பார்க்கவும்).

### திருமணம் ஏன் அத்தியாவசியமானது

“குடும்பம்: உலகத்திற்கு ஒரு பிரகடனத்தில்” *“. . . ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையேயான திருமணமானது தேவனால் நியமிக்கப்பட்டது என்றும், தம்முடைய பிள்ளைகளின் நித்திய வாழ்வுக்கான சிருஷ்டிகரின் திட்டத்திற்கு குடும்பம்தான் பிரதானமாயிருக்கிறது”* என்பதை பிரதான தலைமையும் பன்னிரு அப்போஸ்தலர் குழுவும் பிரகடனப்படுத்தினார்கள். பிரகடனத்தின் முக்கிய தலைப்பை அறிமுகப்படுத்தும் அல்லது ஸ்தாபிக்கிற இந்த சொற்றொடர் திருமணத்தின் குறிப்பிடத்தக்க கோட்பாட்டைபற்றி நமக்கு போதித்து பிதாவின் திருமணம் மற்றும் குடும்பத் திட்டத்தின் அடிப்படை முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. கல்லறைக்கும் அப்பாலும் நிலைநிற்கக்கூடிய அன்பான ஒரு குடும்ப உறவை உருவாக்கும் முறையில் ஒரு அத்தியாவசிய கட்டளையே நீதியின் திருமணம் ஆகும்.

பிதாவின் திட்டத்திற்கு நித்திய திருமணம் ஏன் அத்தியாவசியமானது என்பதைப் புரிந்துகொள்ள இரண்டு



அட்டை புகைப்படம்-க்ரெய்க் டைமண்ட்; புகைப்படம்- வெல்டன் சி. ஆண்டர்சன் மற்றும் ஜான் லூக்; குறிப்பிட்டதைத் தவிர; ஊஞ்சலில் தம்பதியின் புகைப்படம் மற்றும் திருமண மோதிரம் - ராபர்ட் காசே, பிரதி எடுக்கப்படக் கூடாது



கண்டிப்பான கோட்பாட்டு காரணங்கள் நமக்குதவுகின்றன.

***காரணம் 1:*** *ஆண் மற்றும் பெண் ஆவிகளின் தன்மைகள் ஒன்றுக்கொன்று நிறைவானதும் பரிபூரணமானதுமானதாயிருப்பதால் மேன்மையடைதலுக்கு நோக்கி ஆண்களும் பெண்களும் ஒன்றுசேர்ந்து முன்னேற திட்டமிடப்பட்டிருக்கிறார்கள்.*



அவரது பிள்ளைகளுக்கான பிதாவின் திட்டத்தின் மேன்மைமிக்க திருமணத்தின் நித்திய தன்மையும் முக்கியத்துவமும் முழுவதுமாக புரிந்து கொள்ளப்பட முடியும். “ஆணும் பெண்ணுமான எல்லா மனுஷரும் தேவ சாயலாய் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் பரலோகப் பெற்றோர்களுக்குப் பிரியமான ஆவி குமாரனாகவோ அல்லது குமாரத்தியாகவோ இருப்பதால், ஒவ்வொருவருக்கும் தெய்வீக இயல்பும் இலக்கும் உண்டு”. பரலோகப் பிதாவின் ஆவியின் குமாரர்களும் குமாரத்திகளும் பூமியின் அனுபவத்தைப்பெற மாமிசமும் எலும்பும் உள்ள சரீரத்தைப் பெறவும் பரிபூரணத்தை நோக்கி முன்னேறவும் மகத்தான மகிழ்ச்சியின் திட்டம், சாத்தியமாக்குகிறது.

அநித்தியத்திற்கு முந்திய, அநித்திய மற்றும் நித்திய அடையாளம் மற்றும் நோக்கத்திற்கு பால் இனம் ஒரு நபருடைய முக்கிய குணாதிசயமாயிருக்கிறது மற்றும் நாம் யாரென்றும், பூமியின்மேல் நாம் ஏனிருக்கிறோமென்றும் நாம் என்ன செய்யவேண்டுமென்றும் யாராக மாற வேண்டுமென்றும் மிகப்பெரிய அளவில் விவரிக்கிறது. தெய்வீக நோக்கத்திற்காக, ஆண் பெண் ஆவிகள் வேறுபட்டும், தனித்தன்மையுடனும் ஒன்றுக்கொன்று பொருத்தமாயும் இருக்கிறது.

பூமி உருவாக்கப்பட்ட பின், ஏதேன் தோட்டத்தில் ஆதாம் வைக்கப்பட்டான். முக்கியமாக, எப்படியாயினும், மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று தேவன் சொன்னார் (ஆதியாகமம் 2:18; மோசே 3:18) மற்றும் ஏவாள், ஆதாமின் கூட்டாளியாகவும் துணையாகவுமானாள். ஆண்கள் பெண்கள் இருவரின் தனித்துவமான ஆவிக்குரிய, சரீரப்பிரகாரமான, மனத்தளவில் மற்றும் உணர்வுப்பூர்வமான ஆற்றல்களின் இணைப்பில் சந்தோஷத்தின் திட்டத்தை நிறைவேற்ற அவைகள் அவசியமாயிருக்கிறது. தனியாக, அவன் அல்லது அவளின் சிருஷ்டிப்பின் நோக்கங்களை ஆணாலோ பெண்ணாலோ தனியாக நிறைவேற்ற முடியாது.

பரிபூரணத்திற்கும் மகிமையின் ஒரு முழுமைக்கும் ஒன்றுசேர்ந்து முன்னேற தெய்வீக வடிவமைப்பால் ஆண்களும் பெண்களும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களது வித்தியாசமான மனோபாவங்களாலும் திறமைகளாலும் ஆண் பெண் இருவரும் தங்களின் தனித்துவமான தோற்றங்களாலும் அனுபவங்களாலும் திருமண உறவு ஒன்றைக் கொண்டுவருகிறார்கள். வேறு எந்த

வழியிலும் அடைமுடியாத ஒரு ஒரு மைப்பாட்டையும் ஒற்றுமையையும் சரிசமமாக ஆனால் வெவ்வேறாக ஆணும் பெண்ணும் அளிக்கிறார்கள். அவர்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவர் கற்றுக்கொண்டு, ஒருவரையொருவர் பலப்படுத்தி ஆசீர்வதிப்பதில், ஆண் நிறைவுபெற்று பெண்ணை பூரணமாக்குகிறான் மற்றும் பெண் நிறைவுபெற்று ஆணை பூரணப்படுத்துகிறாள். ஆகிலும் **கர்த்தருக்குள்** ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை (1கொரிந்தியர் 11:11 முக்கியத்துவம் சேர்க்கப்பட்டுள்ளது).

***காரணம் 2:*** *தெய்வீக வடிவமைப்பில், ஆண் பெண் இருவரும் அநித்தியத்திற்குள் பிள்ளைகளைக் கொண்டுவரவேண்டும் மற்றும் பிள்ளைகளை வளர்ப்பதிலும் போஷிப்பதிலும் சிறந்த அமைப்பை வழங்கவேண்டும்.*

நீங்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள் என்று தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பழங்காலத்தில் கொடுத்த கட்டளை, பூமியில் இன்னமும் நடைமுறையிலுள்ளது. “சந்ததியை விருத்தி செய்கிற புனிதமான வல்லமைகளானவை சட்டப்படி திருமணமான கணவனும் மனைவியுமாகிய ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் மட்டுமே பிரயோகிக்கப்படவேண்டும் என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார். பூமியில் உயிர் சிருஷ்டிக்கப்படும் வழிகள் தேவனால் ஏற்படுத்தப்பட்டது” அப்படியாக, ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் திருமணம் என்ற ஒரு அதிகாரப்பூர்வமான வழியின் மூலமாக, அநித்தியத்திற்கு முந்திய ஆவிகள் பூமியில் வருகிறது. இந்த வழியின் புனிதத்தை திருமணத்திற்கு முந்திய முற்றிலுமான பாலியல் இச்சையடக்கமும் திருமணத்திற்குள் முற்றிலுமான கற்புடைமையும் பாதுகாக்கிறது.

ஒரு நேசமுள்ள உண்மையுள்ள கணவனையும் மனைவியையும் கொண்ட வீடு ஒரு உயர்வான அமைப்பைக் கொண்டிருந்து அதில் அன்பிலும் நீதியிலும் பிள்ளைகள் வளர்ந்து அங்கு அவர்களின் ஆவிக்குரிய மாமிசத்திற்குரிய தேவைகள் நிறைவேற்றப்படுகிறது. ஒரு திருமண உறவின் பரிபூரணத்திற்கு தங்களின் தனித்தன்மையான குணாதிசயங்களால் ஆண் பெண் இருவரும் செய்வதுபோல, பிள்ளைகளை வளர்ப்பதிலும், போஷிப்பதிலும், போதிப்பதிலும் அதே அந்த குணாதிசயங்கள் முக்கியமானதாயிருக்கிறது. திருமண பந்த இணைப்புக்குள் மாத்திரமே பிள்ளைகளைப் பெற்றெடுக்கக்கூடிய உரிமையுள்ளது. மேலும் விவாக வாக்குத்தத்தங்களை பூரண விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிகிற ஒரு தாயும் தகப்பனாலும் அவர்கள் பேணி வளர்க்கப்படவேண்டும்.

**வழிகாட்டும் கொள்கைகள்**

பிதாவின் சந்தோஷத்தின் திட்டத்தில் நித்திய திருமணத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி



***திருமணத்தின் சீரிய கோட்பாட்டை நாம் கற்றுக்கொள்ளும்போது, புரிந்துகொண்டு அவற்றை பிரயோகிக்க முயற்சிக்கும்போது வரக்கூடிய ஆசீர்வாதங்களை மூப்பர் பார்லே பி.பிராட் வெளிப்படுத்தினார்.***

கோட்பாட்டின் காரணங்களை நாம் பார்த்தவை, திருமணம் செய்துகொள்ள ஆயத்தப்படுகிறவர்களுக்கும், திருமணமானவர்களுக்கும் சபையில் நமது சேவையிலிருப்போருக்கும் வழிநடத்தும் கொள்கைகளை ஆலோசனையளிக்கிறது.

***கொள்கை 1:*** *பிதாவின் சந்தோஷத் திட்டத்தின் அமைப்பிற்குள்மட்டுமே நித்திய திருமணத்தின் முக்கியத்துவம் புரிந்துகொள்ளப்படும்.*

திருமணத்தை, சமுதாயத்தின் ஒரு அடிப்படை அங்கமாகவும், ஒரு பலமான தேசத்திற்கு ஒரு அஸ்திபாரமாகவும், ஒரு முக்கியமான சமுதாய மற்றும் கலாச்சார பயிற்சிக்கூடமாகவும் நாம் அடிக்கடி பேசுகிறோம் வலியுறுத்திக் காட்டுகிறோம். ஆனால் மறுஸ்தாபிதம் செய்யப்பட்ட சுவிசேஷம் திருமணத்தை அதற்கும் அதிகமானதென்று நாம் புரிந்துகொள்ள நமக்குதவுகிறது!

பிதாவின் திருமணத்தின் திட்டத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி போதுமான அளவுக்கு போதித்தலில்லாமல் திருமணத்தைப்பற்றி நாம் ஒருவேளை பேசுகிறோமோ? சந்தோஷ திட்டத்தின் அடிப்படை கோட்பாட்டின் அதற்கான எளிய இணைப்பில்லாமல் திருமணத்தை வலியுறுத்துவது குழப்பமும் துன்மார்க்கமும் அதிகரித்துவரும் உலகத்தில், போதுமான வழிகாட்டுதலையும், பாதுகாப்பையும், அல்லது நம்பிக்கையையும் கொடுக்காது. மீட்பின் திட்டத்தை வெளிப்படுத்திய பிறகு தேவன் மனுஷர்களுக்கு கட்டளைகளைக் கொடுத்தார் (ஆல்மா 12:32 முக்கியத்தும் சேர்க்கப்பட்டுள்ளது).

திருமணத்தின் சீரிய கோட்பாடை நாம் கற்றுக்கொள்ளும்போது, புரிந்துகொள்ளும்போது, அவைகளை நமது வாழ்க்கையில் பிரயோகப்படுத்த முயற்சிக்கும்போது வருகிற ஆசீர்வாதங்களை மூப்பர் பார்லே பி.பிராட் மிக அழகாக வெளிப்படுத்தினார்.

தகப்பனுக்கும் தாய்க்கும், கணவனுக்கும் மனைவிக்கும். சகோதரருக்கும் சகோதரிக்கும், மகனுக்கும் மகளுக்குமுள்ள அன்பின் பிணைப்பின் உறவை எவ்வாறு மதிப்பளிப்பது என்பதை ஜோசப் ஸ்மித் எனக்குப் போதித்தார்.

எனக்கு மிகநேசமுள்ள என் மனைவியை இப்போதும் நித்தியத்திற்கும் நான் கொண்டிருக்கமுடியுமென்பதையும்; தெய்வீக அன்பின் ஊற்றிலிருந்து, ஒவ்வொருவருக்கும் வரும் அன்பினால் பிணைக்கச் செய்த புனித உணர்வுகளையும் மனக்கிளர்ச்சியையும் நான் அவரிடமிருந்தே தெரிந்துகொண்டேன். . . .

“நான் முன்பு நேசித்திருக்கிறேன், ஆனால் ஏன் என எனக்குத் தெரியாது. ஆனால், இந்த துன்மார்க்கமான உலகப் பிரகாரமான வாழ்வின் தற்காலிகமான காரியங்களிலிருந்து எனது ஆத்துமாவை



மலரின் மற்றும் குடும்பத்தின் புகைப்படம்- ஸ்லைவ் பன்டார்சன், பிரதி எடுக்கப்படக்கூடாது; பார்லே பி.பிராட்டின் புகைப்படம் பிரதி எடுக்கப்படக்கூடாது

உயர்த்தி ஒரு கடலின் அளவுக்கு விஸ்தாரமாக்கிய ஒரு உயர்வான உணர்வுடனும், ஒரு மேன்மையான உணர்வோடும் புனிதத்துடன் இப்போது நான் நேசிக்கிறேன் . . . சுருக்கமாக சொன்னால், ஒரு ஆவியுடன் புரிந்துகொள்ளுதலுடனும் இப்போது நான் நேசிக்கமுடிகிறது.

“இருந்தும், அந்த நேரத்தில்; எனது நேசமுள்ள அன்புள்ள சகோதரர் ஜோசப் ஸ்மித் திரையின் ஒரு மூலையை தூக்கி நித்தியத்தின் ஒரு காட்சியை எனக்குக் கொடுத்தார்”

பிதாவின் சந்தோஷத்தின் திட்டத்தின் அமைப்பிற்குள் மட்டுமே எவ்வாறு நித்திய திருமணத்தின் முக்கியத்துவம் புரிந்துகொள்ளப்பட முடியுமென்பதை ஆண்களும் பெண்களுமாக, கணவன்மார்களாக மனைவிமார்களாக, சபைத் தலைவர்களாக, நாம் பார்க்கமுடிகிறதா? திட்டத்தின் கோட்பாடு நம்பிக்கைக்கு ஆண்களையும் பெண்களையும் நடத்துகிறது மற்றும் நித்திய திருமணத்திற்கு ஆயத்தப்படுத்துகிறது மற்றும் பயங்களை வென்று திருமணத்தை தள்ளிப்போடுகிற அல்லது தவிர்க்கிற சில தனிப்பட்டவர்களுக்குக் காரணமான நிச்சயமின்மைகளை தடுக்கிறது. நித்திய திருமணத்தின் உடன்படிக்கையை உறுதியாக கௌரவிக்கிற நமது தீர்மானத்தையும் திட்டத்தின் சரியான புரிந்துகொள்ளுதல் பலப்படுத்துகிறது. நமது தனிப்பட்ட கற்றுக்கொள்ளுதல், நமது போதித்தல், வீடு, சபை இரண்டிலும் நமது சாட்சியளித்தல், இந்த சத்தியத்தை நாம் தியானித்து மிக அதிகமாக புரிந்துகொள்ளும்போது மேன்மைப்படுத்தப்படுகிறோம்.

***கொள்கை 2:*** *தன்னைப்போல மனுஷர் யாவரும் துர்ப்பாக்கியவான்களாய் இருக்க சாத்தான் வகைதேடுகிறான்.*

தனிப்பட்ட முறையில் நம்மில் அநேகருக்கும், நமது குடும்பங்களுக்கும் உலகத்திற்கும் முக்கியமாயிருக்கிற கோட்பாடுகளை லூசிபர் இரக்கமற்றமுறையில் தாக்கி திரித்துக்கூறுகிறான். அவனது மிகஅதிகமான நேரிடையான கொடுமையான தாக்குதலில் துயரம் மையப்படுத்தப்படுகிறது? சந்ததி உற்பத்தியின் அதிகாரத்தை துர்ப்பிரயோகப்படுத்தவும், குறிப்பாக திருமணம் தேவனால் நியமிக்கப்படுவதாலும், மகிழ்ச்சியின் திட்டத்திற்கு நித்திய திருமணம் முக்கியமாயிருப்பதாலும் நீதியான திருமணத்தை தடங்கல் செய்யவும் பாலினத்தைப்பற்றிய புரிந்துகொள்ளுதலைக் குழப்ப சாத்தான் ஓயாமல் வேலை செய்கிறான். நித்திய திருமணத்தின்மீது துயரத்தின் தாக்குதல்கள் அதன் அளவிலும், அடிக்கடியும் உயர்ந்த செயற்கை தரத்திலும் தொடர்ந்து அதிகரித்து வரும்.

திருமணத்தின் மற்றும் வீட்டின் நல்வாழ்விற்காக ஒரு போரில் இன்று நாம் ஈடுபட்டிருப்பதால், சமீபத்தில் எனது மார்மன் புத்தக படிப்பில், லாமானியர்களுக்கு எதிராக நெப்பியர்கள் தங்கள் யுத்தங்களை ஆயத்தப்படுத்திய வழிகளை நான் கவனித்தேன். நெப்பியர்களின் ஜனங்கள் தங்கள் எதிரிகளின் நோக்கங்களை அறிந்திருந்தபடியால் அவர்களை சந்திக்க ஆயத்தமானார்கள் என்பதை நான் கவனித்தேன் (ஆல்மா 2:12–13; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டுள்ளது) . நான் வாசித்தபோது, *ஒரு எதிரியின் நோக்கத்தை புரிந்துகொள்ளுதல்*, ஆற்றலுள்ள ஆயத்தத்திற்கான முதல் நிபந்தனைக்கு திறவுகோலாயிருக்கிறது என்பதை நான் அறிந்துகொண்டேன். அதைப்போலவே இந்த பிற்காலத்தின் போரில் நமது எதிரியின் நோக்கத்தை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

அவரது பிள்ளைகளுக்கு வழிகாட்டவும், அவர்கள் சந்தோஷமாயிருக்க உதவவும், பாதுகாப்பாக அவர்களை வீட்டிற்கு கொண்டுவரவும் பிதாவின் திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. தேவனின் குமாரர்களையும் குமாரத்திகளையும் குழப்பவும் துக்கப்படவைக்கவும் அவர்களது நித்திய முன்னேற்றத்தை தடுக்கவும் திட்டத்தைத் தாக்குதல் லூசிபரின் நோக்கமாயிருக்கிறது. நாம் அனைவரும் அவனைப்போல துர்ப்பாக்கியவான்களாகவேண்டுமென்பது பொய்களின் பிதாவின் நினைக்கமுடியாத நோக்கம் (2நெப்பி 2:27), மற்றும் அவன் அதிகமாக வெறுக்கிற பிதாவின் திட்டத்தின் அடிப்படைகளை மாற்ற உழைக்கிறான். சாத்தானுக்கு ஒரு சரீரமில்லை, அவனால் திருமணம் செய்துகொள்ளமுடியாது; மேலும் அவனுக்கு ஒரு குடும்பம் இருக்காது. மேலும் தெய்வீகத்தால் நியமிக்கப்பட்ட பாலினத்தின், திருமணத்தின், குடும்பத்தின் நோக்கங்களை தொடர்ந்து குழப்ப இடைவிடாது முயற்சிக்கிறான்.

திருமணத்தைப்பற்றிய குழப்பத்துடன் பாலினத்தின் குழப்பத்தை இணைத்து பின்னர் அத்தகைய கருத்துக்களை சட்டமாக்க, மிக சமீபத்தில் பிசாசானவன் முயற்சித்தான். அநித்தியத்திற்கும் அப்பால் நித்தியத்திற்குள் நாம் பார்த்தால், பகைவனானவன் பரிந்து

ரைக்கிற போலியான மாற்றுவழி ஒரு ஆணும் பெண்ணும் ஒன்றுசேர்ந்து முத்த ரிக்கப்படுவதன் மூலம் சாத்தியமாக்கு கிற நிறைவுக்கு, ஒரு நீதியான திருமணத் தின் சந்தோஷத்திற்கு, சந்ததி விருத்தி யின் மகிழ்ச்சிக்கு, அல்லது நித்திய முன் னேற்றத்தின் ஆசீர்வாதத்திற்கு எப்போ துமே நடத்த முடியாதென்பதை பகுத்து ணர எளிதாயிருக்கும்.

எதிரியின் நோக்கத்தைப்பற்றி நாம் தெரிந்துகொண்டவைகளினால் நாம் ஒவ்வொருவரும் குறிப்பாக, நமது சொந்த திருமணங்களை எவ்வாறு காப் பாற்றி, பாதுகாத்துக்கொள்வதென்பதி லும், நித்தியத்திற்கும் குறிப்பிடத்தக்க பாலியல் மற்றும் திருமணத்திற்கான பிதாவின் திட்டத்தின் பாத்திரத்தைப் பற்றி வீட்டில் மற்றும் நமது சபையின் நியமங்களில் சரியான கொள்கைகளை எவ்வாறு நாம் கற்றுக்கொள்ள, போதிக்க முடியும் என்பதிலும் தனிப்பட்ட உணர்த்துதலைப் பெற நாடுவதில் நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

***கொள்கை 3:*** *அன்பின் சந்தோஷத்தின் முடிவான ஆசீர்வாதங்கள் நித்திய திரும ணத்தின் உடன்படிக்கையின் உறவின் மூலமாக பெறக்கூடியவை.*

உடன்படிக்கையின் திருமண உறவு ஒன்றில் கர்த்தராகிய இயேசு கிறிஸ் துவே முக்கியமானவர். ஒரு மூலையின் அடிப்பக்கத்தில் ஒரு பெண்ணுடனும் மற்றொரு மூலையின் அடிப்பக்கத்தில் ஒரு ஆணுடனும் இந்த முக்கோணத் தின் உச்சியில் இரட்சகர் எவ்வாறு வைக் கப்பட்டிருக்கிறார் என்பதை தயவு செய்து கவனிக்கவும். அவர்கள் தனித்த னியாகவும் அசையாமலும் “கிறிஸ்து வண்டை வரும்போது” மற்றும் “அவரில் பூரணப்பட” முயற்சிசெய்யும் போதும் ஆணுக்கும் பெண்ணுக்குமி டையிலுள்ள உறவில் என்ன நடக்கும் என்பதை இப்போது கருத்தில் கொள்ள வும் (மரோனி 10:32). மீட்பராலும் அவர் மூலமாகவும் ஆணும் பெண்ணும் ஒன்றுசேர்ந்து நெருங்கிவருகிறார்கள்.

சேவை செய்ய கற்றுக்கொண்டு ஒருவ ருக்கொருவர் மதிப்பளிக்கும்போது, அவர்கள் வாழ்க்கை அனுபவங்களை பகிர்ந்துகொள்ளும்போது மற்றும் ஒன்று சேர்ந்து வளர்ந்து அவர்கள் ஒருவராகி மற்றும் அவர்களின் குறிப்பிடத்தக்க தன் மையில் ஒற்றுமையாயிருப்பதன் மூலம் அவர்கள் ஆசீர்வதிக்கப்படும்போது, அவரது பிள்ளைகளுக்காக நமது பரலோ கப் பிதா விரும்புகிற நிறைவேற்றுதலை உணர்ந்துகொள்ள உணர ஆரம்பிக்கும் போது, ஒரு கணவனும் மனைவியுமாக ஒவ்வொருவரும் கர்த்தருக்குள் இழுக்கப் படுகிறார்கள் (3நெப்பி 27:14 பார்க்க வும்). பிதாவின் திட்டத்தின் முக்கிய நோக்கமான இறுதியான சந்தோஷம், நித்திய திருமணத்தின் உடன்படிக்கை களை செய்வதிலும் அவைகளை கௌ ரவிப்பதிலும் பெறப்படுகிறது.

ஆண்களும் பெண்களுமாக, கணவன் மார்களாக மனைவிமார்களாக, சபைத் தலைவர்களாக நமது தனிப்பட்ட எடுத் துக்காட்டின் மூலம் வாலிப ஆண்களும்



***தனிப்பட்ட முறையிலும் ஸ்திரமாகவும் கிறிஸ்துவண்டை கணவன் மனைவியாக வரும்போது அவர்கள் ஒருவருக்கொருவர் நெருக்கமாகிறார்கள்.***

பெண்களும் நீதியான திருமணத்தைப் பற்றி கற்றுக் கொள்ளவும் ஆயத்தப்பட வும் அவர்களுக்குதவ இருப்பது நமது மிக அதிகமான பொறுப்புகளில் ஒன்று. வாலிப ஆண்களும் பெண்களுமாக தகு தியையும், நேர்மையையும், தியாகத்தை யும் மற்றும் நமது திருமணங்களில் உடன்படிக்கைகளை கௌரவித்து பின்னர் அந்த இளைஞர்கள் தங்கள் குடு ம்பங்களிலும் திருமண உறவுகளிலும் அதே கொள்கைகளைப் பின்பற்ற நாடு வார்கள். நமது நித்திய துணையை நமது உயர்வான முன்னுரிமையாக வசதியாக வும் சௌகரியமாகவும் நாம் செய்வதை வாலிபர்கள் கவனிக்கும்போது அவர்கள் குறைவான சுயநலவாதிகளாயிருந்து கொடுப்பதிலும், சேவைசெய்வதிலும், அதிகமாக முயன்று ஒரு சமமான, நிலை யான துணையை உருவாக்குவார்கள். பரஸ்பர மரியாதையையும், அன்பையும், நம்பிக்கையையும் நேசத்தையும் ஒரு கணவருக்கும் மனைவிக்குமிடையில் வாலிப பெண்களும் ஆண்களும் காணு ம்போது பின்னர் அதே குணாதிசயங் களை தங்கள் வாழ்க்கையிலும் வளர்க்க முயற்சிப்பார்கள். நாம் என்ன சொல்கி றோம் என்பதை அவர்கள் கொஞ்சமாக நினைவு வைத்திருந்தாலும்கூட, நாம் என்ன செய்கிறோம் என்பதிலிருந்தும் நாம் யாராயிருக்கிறோமென்பதிலுமிருந் தும் சபையின் நமது பிள்ளைகளும் வாலி பர்களும் கற்றுக்கொள்வார்கள்.

துரதிருஷ்டவசமாக, இன்று அநேக சபையில் வாலிப அங்கத்தினர்கள் நித்திய திருமணத்திற்கும் மற்றும் நித்திய திரும ணத்திற்கு முன்னேறிச்செல்ல தடுமாடுவ தற்கும் பயப்படுகிறார்கள் ஏனெனில் அவர்கள் உலகத்தில் அதிகமான விவாக ரத்தைக் காண்கிறார்கள் மற்றும் தங்கள் வீடுகளிலும் சபையிலும் முறிந்த உடன்ப டிக்கைகளையும் காண்கிறார்கள்.

நித்திய திருமணமென்பது, ஏதாவது காரணத்தினால் எந்த நேரத்திலும் உடைக்கப்படுகிற வெறும் சட்டப்படி யான ஒப்பந்தமில்லை. மாறாக, அது இப் போதைக்கும் நித்திய முழுமைக்கும் கட் டப்பட்டிருக்கிற தேவனுடனான ஒரு புனித உடன்படிக்கை. திருமணத்தில் உண்மையாயிருத்தலும் கற்புடைமையும் பிரசங்கங்களில் பேசப்படும் கவர்ச்சிகர மான வார்த்தைகளில்லை; மாறாக, அவைகள் நமது சொந்த உடன்படிக்கை திருமண உறவுகளில் தெளிவான கொள் கையாயிருக்கவேண்டும்.

நமது தனிப்பட்ட எடுத்துக்காட்டின் முக்கியத்துவத்தை நாம் கருத்தில்கொள் ளும்போது, நாம் முன்னேறவேண்டிய பகுதிகளை நீங்களும் நானும் பகுத்துணர் கிறோமா? நமது மனங்களை பரிசுத்த ஆவி உணர்த்தி, நமது இருதயங்களை மென்மைப்படுத்தி, செய்யவும் சிறந்தவர் களாக நாம் மாற நம்மை ஊக்குவிக்கி றதா? ஆசாரியத்துவ தலைவர்களாக, து ணை சங்கத் தலைவர்களாக திருமணத் தையும் வீட்டையும் பலப்படுத்துவதில்

*அவர் உயிர்த்தெழுந்தாரிலிருந்து விவரம், டெல் பார்சன், பிரதி எடுக்கப்படக்கூடாது; புகைப்படம் -டெரெக் இஸ்ரேல்சன், பிரதி எடுக்கப்படக்கூடாது*

நமது முயற்சிகளை நாம் மையப்படுத்து கிறோமா?

துயரத்தின் தாக்குதல்களுக்கு எதிராக தங்களையும் தங்கள் வீடுகளையும் ஒன்று சேர்ந்து அரணாக்குவதற்கு கணவன்மார் களுக்கும் மனைவிகளுக்கும் நேரம் தேவையாயிருக்கிறது. சபையில் நமது அழைப்புகளை நிறைவேற்ற நாம் முயற் சிக்கும்போது, கணவன்மார்களையும் மனைவிகளையும் தாய்மார்களையும் தகப்பன்மார்களையும் வீட்டில் அவர்க ளின் புனித பொறுப்புகளுக்கு எதேச்சை யாக நாம் தடங்கல் ஏற்படுத்துகிறோமா? உதாரணமாக, ஒரு கணவனுக்கும் மனை விக்குமிடையிலுள்ள அத்தியாவசிய மான உறவுடன் மற்றும் பிள்ளைகளுடன் அவர்கடைய உறவுகளுடன் தலையிடு கிற ஒரு வழியில் அவசியமில்லாத கூட் டங்களையும் நிகழ்ச்சிகளையும் சில நேரங்களில் நாம் ஏற்படுத்துகிறோமா?

இந்த கேள்விகளை நாம் கவனமாக சிந்திக்கும்போது, வீட்டிலும் சபையி லும் நாம் செய்யவேண்டிய காரியங் களை கற்றுக்கொள்ள, இப்போதுகூட ஆவி உதவிசெய்து தொடர்ந்து நமக்குத வுகிறது என்பதில் எனக்கு திடநம்பிக்கை யிருக்கிறது.

**நமக்குத் தேவையான ஆவிக்குரிய ஆதாரங்கள்**

திட்டத்தின் கோட்பாடை கற்றுக் கொள்ள மற்றும் புரிந்துகொள்ள, நீதியான திருமணத்தை ஆதரிக்க, எடுத் துக்காட்டுகளாயிருக்க, வீட்டிலும் சபை யிலும் சரியான கொள்கைகளைப் போதிக்க நமது பொறுப்புகள், இந்த வேலையை நாம் செய்யத் தகுதியுள்ளவர் களா என நாம் ஆச்சரியப்பட காரணமா யிருக்கும். மிகவும் ஒரு அசாதாரண வேலையை நிறைவேற்ற வேண்டிய நாம் சாதாரணமான ஜனங்கள்.

ஆற்றல்மிக்க ஒரு இளம் குடும்பத்தின் எண்ணிலடங்கா தகுதியான தேவைகளை நிறைவேற்ற முயற்சிப்பதிலும், சபை, தொழில் மற்றும் சமுதாய பொறுப்புகள் என்பதில், அநேக ஆண்டுகளுக்கு முன் சகோதரி பெட்னரும் நானும் ஈடுபட்டி ருந்தோம். எங்களின் முக்கியமான முன்னு ரிமைகளை நாங்கள் எவ்வளவு ஆற்றலு



நமது தனிப்பட்ட எடுத்துக்காட்டின் மூலம் வாலிப ஆண்களும் பெண்களும் நீதியான திருமணத் தைப்பற்றி கற்றுக்கொள்ளவும் ஆயத்தப்படவும் அவர்களுக்குதவ இருப்பது நமது மிக அதிகமான பொறுப்புகளில் ஒன்று.

டன் செய்கிறோம் என்பதைப்பற்றி ஒரு இரவில், பிள்ளைகள் தூங்கியபின், நீண்ட நேரமாக நாங்கள் பேசினோம். அநித்தி யத்தில் நாங்கள் செய்த உடன்படிக் கையை முழுவதுமாக நாங்கள் கௌரவிக் கவில்லையெனில் நித்தியத்தில் வாக்களிக் கப்பட்ட ஆசீர்வாதங்களை நாங்கள் பெற மாட்டோம் என்பதை நாங்கள் உணர்ந்து கொண்டோம். அதைச் செய்யவும் ஒரு சிறந்த கணவன் மனைவியாக இருக்கவும் நாங்கள் ஒன்றுசேர்ந்து தீர்மானித்தோம். அநேக ஆண்டுகளுக்கு நாங்கள் கற்றுக் கொண்ட அந்த பாடம் எங்கள் திருமணத் தில் பயங்கர வித்தியாசத்தை ஏற்படுத்தி யது.

விலையேறப்பெற்ற நித்திய நோக் கத்தை சந்தோஷ திட்டத்தின் இனிய எளிய கோட்பாடு அளித்து நித்திய திரும ணத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள நமக்குதவுகிறது. நமக்குத் தேவையான அனைத்து ஆவியின் ஆதா ரங்களுடன் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக் கிறோம். இயேசு கிறிஸ்துவின் கோட் பாட்டின் பரிபூரணம் நமக்கிருக்கிறது. நமக்கு பரிசுத்த ஆவியும் வெளிப்படுத்து தலும் இருக்கிறது. நமக்கு இரட்சிப்பின் நியமங்களும், உடன்படிக்கைகளும் ஆல யங்களும் இருக்கின்றன. நம்மிடம் ஆசா ரியத்துவமும் தீர்க்கதரிசிகளுமிருக்கின்ற னர். நம்மிடம் பரிசுத்த வேதங்களும் தேவனின் வார்த்தைகளின் வல்லமையுமி ருக்கின்றன. மேலும் நமக்கு பிற்காலப் பரிசுத்தவான்களின் சபையுமிருக்கிறது.

நாம் கற்றுக்கொள்ளவேண்டிய, போதிக்கவேண்டிய, பலப்படுத்தவேண் டிய நீதியான திருமணத்தைப் பாதுகாக்க வேண்டிய நமக்குத் தேவையான அனைத்து ஆவிக்குரிய ஆதாரங்களுடன் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நான் சாட்சியளிக்கிறேன் மற்றும் அதனால் உண்மையில் நாம் கண வன்மார்களாக மனைவிமார்களாக நித்தி யத்தில் குடும்பங்களாக சந்தோஷத்தில் ஒன்றுகூடி வாழ முடியும். இயேசு கிறிஸ் துவின் பரிசுத்த நாமத்தில் ஆமேன்.

**குறிப்புகள்**

1. பிரதான தலைமையின் கடிதத்தைப் பார்க்க வும், பிப்ருவரி 11, 1999; *லியஹோனா,* டிசம்பர் 1999, 1 பார்க்கவும்.
2. "குடும்பம்: உலகத்திற்கு ஒரு பிரகடனம்." *லியஹோனா, அக்டோபர் 2004, 49.*
3. *லியஹோனா, அக்டோபர் 2004, 49.*
4. *லியஹோனா, அக்டோபர் 2004, 49.*
5. *லியஹோனா, அக்டோபர் 2004, 49.*
6. *லியஹோனா, அக்டோபர் 2004, 49.*
7. பார்லே பி.பிராட்டின் சுயசரிதை, பார்லே பி.பிராட் ஜூனியர் (1938), 297–98. தொகுப்பு.

# ஒருவரோடொருவர் அன்புகூர்ந்து பராமரிக்கும்படியான புனிதமான பொறுப்பு

**மூப்பர் எல். டாம் பெரி**
**பன்னிரு அப்போஸ்தலர் குழும அங்கத்தினர்**



**நமது பொறுப்புகளை சமநிலையில் வைத்திருத்தல்**

குடும்பத்தைப்பற்றிய பிரகடனத்தின் பின்வரும் வாக்கியம் எனக்கு நியமிக்கப்பட்ட தலைப்பு: "கணவனும் மனைவியும் ஒருவரோடொருவரும் மற்றும் அவர்களது பிள்ளைகளிடத்தும் அன்புகூர்ந்து பராமரிக்கும்படியான புனிதமான பொறுப்பைக் கொண்டிருக்கிறார்கள்". பிற பயிற்சிக் கூட்டத்தில் உங்களுக்கு பரிச்சயமாயிருப்பதைவிட முற்றிலும் வேறுமாதிரியான வகையில் இந்த தலைப்பை நான் அணுக விரும்புகிறேன். கையேடுகளிலிருந்து நான் அதிகமாக மேற்கோள் காட்டமாட்டேன்; பதிலாக, நமது பரலோகப் பிதாவின் இராஜ்யத்தில் உங்கள் சேவையைப்பற்றி உங்களிடம் உள்ளத்தோடு உள்ளமாக நான் பேச விரும்புகிறேன். நமது பரலோகப் பிதா நமக்குக் கொடுத்திருக்கிற பிற விசேஷித்த அழைப்புகளுடன், நமது குடும்பங்களை அன்புடனும் நேசத்துடன் நாம் கவனித்துக்கொள்ளும் நமது பொறுப்புகளை நாம் எவ்வாறு சமநிலைப்படுத்துவது என்பதை நாம் நன்றாக புரிந்துகொள்ள முடியுமா என்பதைப் பார்ப்பதே இதன் நோக்கம்.

1830 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி சபை ஸ்தாபிக்கப்பட்டபோது, தற்போது கோட்பாடும் உடன்படிக்கைகளும் 21 வது பகுதியில் பதிவாகியுள்ள ஒரு வெளிப்படுத்துதலை தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித் பெற்றார். அந்த வெளிப்படுத்துதலின் ஒரு பகுதி கூறுகிறது:

"ஜனங்களுக்கு மத்தியில் ஒரு குறிப்பு வைக்கப்படவேண்டுமென வெளிப்படுத்துதலின் ஒரு பகுதி அவர்களுக்குக் கூருகிறது. ஒரு தூரதிருஷ்டிக்காரராக, ஒரு தீர்க்கதரிசியாக, இயேசு கிறிஸ்துவின் ஒரு அப்போஸ்தலராக மேலும் பிதாவின் சித்தத்தினால் சபையில் ஒரு மூப்பராகவும் ஜோசப் அழைக்கப்படுவார்.

"அதன் அஸ்திபாரத்தை போடவும், மிகப் பரிசுத்த விசுவாசத்தில் அதைக் கட்டவும் பரிசுத்த ஆவியால் ஜோசப் ஸ்மித் உணர்த்தப்பட்டார். . . .

"ஆகவே சபைக்கு அனைத்து வார்த்தைகளையும் கட்டளைகளையும் தீர்க்கதரிசி பெற்று நமக்கு கொடுக்கும்போது கர்த்தருக்கு முன்பாக முழுபரிசுத்தமாக நடந்து, அவைகளுக்கு நாம் செவிகொடுக்கவேண்டுமென அவர் கட்டளையிட்டிருக்கிறார்;

"முழு பொறுமையோடும் விசுவாசத்தோடும், கர்த்தரின் வாயிலிருந்து வருவதாக தீர்க்கதரிசியின் வார்த்தைகளை நாம் பெறவேண்டும்" (கோ.உ 21:1–2, 4–5).

புதிதாக நிர்வகிக்கப்பட்ட இந்த சபைக்கு கொடுக்கப்பட்ட முதல் அறிவுரைகளுக்கு மத்தியில் அவரது இராஜ்யத்தைக் கட்ட நமது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அவரது தீர்க்கதரிசி மூலமாக கர்த்தரிடமிருந்து வருகிற உணர்த்துதல்களையும் வெளிப்படுத்துதல்களையும் பின்பற்ற வந்தது அறிக்கை. நமக்காக இருக்கவேண்டிய இந்த மகத்தான பணியான பாதையில் நம்மை நடத்துவதாக அவர் வாக்களிக்கிறார்.

**தீர்க்கதரிசியின் ஆலோசனை**

இதற்கு முன் 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆம் தேதி உலகளாவிய தலைமை பயிற்சி கூட்டத்தில் நமது பொறுப்புகளை சமப்படுத்த திறவுகோலை இன்றைய நமது தீர்க்கதரிசியான தலைவர் கார்டன் பி.ஹிங்க்லி, நமக்குக் கொடுத்தார் என நான் நினைக்கிறேன். அந்த ஒளிபரப்பில் அவர் உரைத்ததாவது:

"இந்த பணியை நாம் தொடர்ந்து செய்துகொண்டு போகும்போது, உலகத்தின் மீட்பரின் நிழலில் நின்றுகொண்டிருப்பது உங்களுக்கு கிடைத்த சிலாக்கியம். அவரது குமாரர்கள் மற்றும் குமாரத்திகளின் சார்பாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தியின் இரத்தத்தின் அழகைப்பற்றிப் பேச உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இதைவிட ஒரு பெரிய சிலாக்கியம் உண்டா?

"உங்களுக்குக் கிடைத்த சிலாக்கியத்திற்காக களிகூருங்கள். உங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பம் என்றென்றும் நிலைத்திருக்காது. வெகு விரைவிலேயே இப்போது உங்களிருக்கும் மகத்தான அனுபவத்தின் நினைவு மட்டுமே உங்களோடிருக்கும்.

"நாம் விரும்புகிற அனைத்தையும் நம்மில் யாருமே நிறைவேற்றுவதில்லை.

ஆனால் நம்மால் முடிந்த சிறந்ததை நாம் செய்வோம். 'நல்லது, உண்மையும் உத்தமமுள்ள ஊழியக்காரனே' என அப்போது மீட்பர் சொல்வார் என்பதில் நான் திருப்தியடைகிறேன் (மத்தேயு 25:21)."

உங்களுக்கு நினைவிலிருப்பதைப் போல, அந்த ஒளிபரப்பில் நமது பொறுப்புகளின் நான்கு பகுதிகளை அவர் நமக்கு விவரித்தார். முதலில் இந்த ஒளிபரப்பில் நாங்கள் சொல்கிற பொருள் முதலில் பிரயோகிக்கப்படுகிறது. அவர் உரைத்ததாவது:

முதன்மையாக, நீங்கள் உங்கள் குடும்பங்களை உதாசீனப்படுத்தாதிருத்தல் அவசியமானது. உங்களிடமுள்ள எதுவும் அவ்வளவு விலையேறப்பெற்றதில்லை. உங்கள் மனைவிமார்களும் உங்கள் பிள்ளைகளும் தங்களின் கணவன்மார்களின் தகப்பன்மார்களின் கவனத்திற்கு தகுதியுள்ளவர்கள். இறுதியில் குடும்ப உறவையே நாம் இந்த வாழ்விற்கும் அப்பால் எடுத்துக்கொண்டு போகப்போகிறோம். வேத வசனத்தை தொகுத்தால், 'சபையில் உண்மையுள்ளவனாக ஊழியம் செய்தாலும் தனது குடும்பத்தை நஷ்டப்படுத்திக் கொண்டால் அவனுக்கு லாபம் என்ன? (மாற்கு 8:36 பார்க்கவும்) "

சபை ஸ்தாபித்தலின் ஆரம்ப நாட்களிலிருந்தே நமது தீர்க்கதரிசிகளிடமிருந்து இது தொடர்ந்துவரும் செய்தி. சுவிசேஷ மற்றும் தலைமை போதனைகளுக்கு மிக முக்கியமான இடம் குடும்பத்திலும் வீட்டிலுமேயாகும். இந்த அறிவுரைகளை நாம் பின்பற்றினால், நமது குடும்பங்களை ஆதரிக்கிற ஒத்துழைக்கிற நியமனங்களையும் திட்ட நிகழ்ச்சிகளையும், நிகழ்ச்சிகளையும், வகுப்புகளையும் நாம் கொடுப்போம்.

**சரியான முன்னுரிமைகளை ஏற்படுத்துதல்**

நமது குடும்ப பொறுப்புகளையும் நமது சபை சேவையையும் எவ்வாறு நாம் நடத்துவோம் என்பதே எவ்வாறு நமது நேரத்தையும் நமது வாழ்க்கையையும் சமநிலையில் வைத்திருக்கிறோம் என்பதற்கான அடிப்படை. உங்களின் நேரத்தைப் பயன்படுத்துவதற்கு எவ்வாறு நீங்கள் முன்னுரிமை அளிப்பது என்பதற்கான தீர்க்கதரிசியின் ஆலோசனையைப் பின்பற்ற உங்களை ஒழுக்கப்படுத்துங்கள்.



***கணவன் மனைவிக்கிடையில் பரிசுத்த ஒற்றுமையை பாதுகாத்துக்கொள்ளவும் காக்கவும், சரித்திரத்தின் எல்லாக் காலங்களிலும், தேவன் அவரது தெய்வீக பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார்.***

*உங்களின் நித்தியத் துணை*

உங்கள் திருமணத்தைப் பலப்படுத்த, ஒருவருக்கொருவரில் உங்களுக்கிருக்கிற உங்கள் அன்பை நடைமுறையில் காட்ட உங்கள் நித்தியத் துணையுடன் உங்களுக்கு எவ்வளவு நேரம் தேவை என்பதை கலந்துரையாடி ஆரம்பியுங்கள். அது உங்களின் முன்னுரிமை.

கிறிஸ்துவினிடத்தில் வந்து நித்திய ஜீவனைப் பெற தனிப்பட்டவர்களுக்கும் குடும்பங்களுக்கும் சபை உதவ வேண்டும். நித்திய ஜீவன், அவரது பிள்ளைகளுக்கு தேவனின் மகத்தான வரம். மேலும் ஒரு குடும்ப உறவின் மூலமாக மட்டுமே அதைப் பெறமுடியும். கர்த்தருக்கு புனிதமானதும் அற்பமாக எண்ணப்படாததுமான கணவன் மனைவிக்குமிடையிலுள்ள இணைப்புடன் இந்த உறவு ஆரம்பிக்கப்படவேண்டும். கர்த்தரின் திட்டத்திற்கும் வானத்தையும் பூமியையும் அவர் உருவாக்கின நோக்கத்திற்காகவும் திருமண உடன்படிக்கை அத்தியாவசியம். பாதுகாப்புக்காகவும் கணவன் மனைவிக்கிடையிலுள்ள பரிசுத்த இணைப்பை காக்கவும் சரித்திரத்தின் எல்லா காலகட்டங்களிலும் அவரது தெய்வீக பிரமாணத்தை அவர் கொடுத்தார்.

*உங்களின் பிள்ளைகள்*

இரண்டாவதாக, உங்கள் பிள்ளைகளின் ஆவிக்குரிய தேவைகளை கருத்தில் கொள்ளவும். அவர்களுடன் நீங்கள் நெருக்கமாயிருப்பதை உறுதிசெய்ய எவ்வளவு நேரம் அவசியப்படும்? என்றென்றைக்கும் பிள்ளைகள் பெறக்கூடிய மிக முக்கியமான அறிவுரைகள் அவர்களின் பெற்றோர்களிடமிருந்து வரவேண்டியதால் அவர்களுக்கு போதிக்க போதுமான நேரத்தை அளிக்கவேண்டியது தகப்பன்மார்களாகிய தாய்மார்களாகிய உங்கள் பொறுப்பு. ஒவ்வொரு பிள்ளைக்கும் நமது அறிவுரைகளில் அந்த போதிப்பில் நாம் இணக்கமாயிருப்பதற்காக, நமது பிள்ளைகளுக்கு சபை என்ன போதிக்கிறது என்பதை நாம் நன்றாக தெரிந்திருக்க வேண்டியதிருக்கிறது. உதாரணமாக, *வாலிபர்களின் பலத்திற்காக* என்ற கைப்பிரதி குடும்பத்தைப்பற்றிய பிரகடனத்தை மேற்கோள்காட்டி, குடும்பங்களைப்பற்றி வாலிபர்களுக்கு இந்த ஆலோசனையை அளிக்கிறது:

புகைப்படம்- ராபர்ட் காசே, பிரதி எடுக்கப்படக்கூடாது



*எப்போதுமே பெறக்கூடிய மிக முக்கியமான அறிவுரைகள் பிள்ளைகளுக்கு தங்களின் பெற்றோர்களிடமிருந்து வரவேண்டும்.*

"குடும்பம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் போதனைகளின்மேல் ஏற்படுத்தப்படும்போது குடும்ப வாழ்வின் சந்தோஷத்தை அநேகமாக அடையக்கூடும். விசுவாசம், ஜெபம் மனந்திரும்புதல், மன்னித்தல், மரியாதை, அன்பு, இரக்கம், வேலை மற்றும் ஆரோக்கியமான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் போன்ற கொள்கைகளின் மீது வெற்றிகரமான திருமணங்களும் குடும்பங்களும் ஸ்தாபிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன".

கைப்பிரதி தொடர்கிறது:

"ஒரு குடும்பத்தின் அங்கமாயிருப்பது ஒரு பெரிய ஆசீர்வாதம். ஒரு நல்ல சூழ்நிலையில் சரியான கொள்கைகளை நீங்கள் கற்றுக்கொள்ள உங்களுக்குதவி, நித்திய ஜீவனுக்கு ஆயத்தப்பட உங்களுக்கு உதவி, உங்களுக்கு துணை மற்றும் சந்தோஷத்துடன் உங்கள் குடும்பம் உங்களுக்கு கொடுக்க முடியும். எல்லா குடும்பங்களும் ஒரே மாதிரியாயிருப்பதில்லை, ஆனால் பரலோகப் பிதாவின் திட்டத்தில் ஒவ்வொன்றும் முக்கியமானவை.

"வீட்டில் சந்தோஷம் நிலவ உங்கள் பங்கைச் செய்யுங்கள். சந்தோஷமாயிருங்கள், உதவியாயிருங்கள் மற்றும் மற்றவர்களிடம் மரியாதையுடனிருங்கள். குடும்ப அங்கத்தினர்கள் சுயநலமாக அல்லது அன்பில்லாமல் பேசுவதாலும் செயல்படுவதாலும் வீட்டில் அநேக பிரச்சினைகள் உருவாக்கப்படுகிறது. குடும்பத்தின் பிற அங்கத்தினர்களின் தேவைகளுடன் உங்களை கருதுங்கள். கேலி பேசுவது, சண்டையிடுவது மற்றும் சச்சரவு செய்தலுக்கு மாறாக சமாதானம் செய்து வைப்பவராக நாடுங்கள். குடும்பம், சபையின் மிக முக்கியமான பரிசுத்தமான அங்கமாயிருக்கிறது என்பதை நினைவுகூருங்கள்."

*உங்கள் குடும்பத்திற்கு வழங்குதல்*

நமது மூன்றாவது முன்னுரிமை நமது குடும்ப அங்கங்களுக்கு அளிப்பதாகும். மீண்டும் குடும்பத்திற்கான பிரகடனத்திலிருந்து:

"தகப்பன்மார்கள் தங்கள் குடும்பங்களை அன்பிலும் நீதியிலும் வழிநடத்த வேண்டுமென்பதும், வாழ்க்கைக்கான தேவைகளையும் தங்களது குடும்பங்களுக்கான பாதுகாப்பையும் அளிக்க பொறுப்புள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்பதும் தெய்வீகத் திட்டமாகும்."

ஒரு வாழ்க்கைக்கான சம்பாத்தியத்திற்கு நல்ல திறமைகளைப் பராமரிப்பது நமக்கு அவசியமாயிருக்கிறது; மாறுகிற ஒரு உலகத்தில் நமது திறமைகளை நாம் புதுப்பித்துக்கொள்ளவேண்டும் அல்லது அவைகள் பழமையாகிப்போகும். சபை நிகழ்ச்சிகளில் நாம் அதிக சுறுசுறுப்பாயிருந்தாலும் நமது முன்னேற்றத்தை அதிகரிக்க சந்தர்ப்பங்களையும் நமது குடும்பங்களின் நல்வாழ்வை விருத்தி செய்வதையும் நாம் தவறவிடக்கூடாது. போதுமான நேரத்தை நாம் ஒதுக்குவதும் வருங்காலத்திற்கு ஆயத்தப்பட நினைப்பதுவும் இதற்கு தேவையாயிருக்கிறது.

இந்த ஆலோசனை சகோதரிகளுக்கும் சகோதரர்களுக்கும் பொருத்தமாயிருக்கிறது. அடிப்படையில் வாழ்க்கைக்கான தேவைகளை தங்களது குடும்பங்களுக்காக அளிக்க பொறுப்பு தகப்பன்மார்களுக்கு இருக்கவேண்டுமென்றிருந்தாலும், "ஊனம் மரணம் அல்லது பிற சூழ்நிலைகளில்" உங்கள் குடும்பங்களுக்கு அளிக்க சகோதரிகளாகிய நீங்களும் உங்கள் திறமைகளை பயன்படுத்தவும் விருத்திசெய்யவும் அவசியமாயிருக்கிறது என பிரகடனம் குறிப்பிடுகிறது.

*சபை சேவை*

சபை நிகழ்ச்சிகளில் நாம் செலவுசெய்யும் நேரத்திற்கு நமது ஒப்புக்கொடுத்தல் நமது நான்காவது முன்னுரிமை. ஊக்கமுள்ள பிற்காலப் பரிசுத்தவான்கள் குடும்பங்கள் தங்களின் சபைக்கான நேரத்திற்கு மதிப்பளிக்கிறார்கள் மற்றும் தங்கள் குடும்ப வாழ்க்கையில் அதற்கு போதுமான நேரமிருக்குமாறு பார்த்துக்கொள்கிறார்கள்.

அவர்களுக்கு அழைப்புக் கொடுக்கப்படும்போதும் எதிர்பார்ப்புகளை உருவாக்கும்போதும் தலைவர்கள் குறிப்பாக வெவ்வேறான குடும்ப சூழ்நிலைகளில் உணர்வுபூர்வமாக இருக்கவேண்டும். சிறுபிள்ளைகள் அவர்களுக்கு அழைப்புக் கொடுக்கப்படும்போதும் எதிர்பார்ப்புகளை உருவாக்கும்போதும் தலைவர்கள் குறிப்பாக வெவ்வேறான குடும்ப சூழ்நிலைகளில் உணர்வுபூர்வமாக இருக்கவேண்டும். சிறுபிள்ளைகள் கொண்ட குடும்பங்களில், வீட்டிற்கு வெளியே அவர்களைக் கொண்டு போவதற்கு தம்பதியர் இருவருக்கும் அழைப்புகளிருக்கு

புகைப்படம் - ஸ்டீவ் பண்டர்சன்; குறிப்பிட்டதைத் தவிர, பிரதி எடுக்கப்படக்கூடாது; அமெரிக்கன் தீர்க்கதரிசி, டெல் பார்சன்; வண்டியின் புகைப்படம் ((=01=))© ((=53=))போட்டோ ஸ்பின்; ஸ்தீரியின் புகைப்படம் - டானி சோலட்டா

ம்போது தங்கள் குடும்ப வாழ்க்கையில் சபை நிகழ்ச்சிகள் தலையிடுகிறதாக அநேகமாக நினைக்க வைக்கும். தங்கள் குடும்ப பொறுப்புகளுடன் சபை சேவையை சமமாக வைக்க அங்கத்தினர்களின் முயற்சிகளை சபை அங்கத்தினர்கள் ஏற்றுக்கொண்டு ஆதரவளிக்கவேண்டும்.

### குடும்ப அங்கத்தினர்களை ஈடுபடுத்துதல்

நமது குடும்பங்களை நமது சேவைகளில் நம்மை ஈடுபடுத்தி நமது சபை அழைப்புகளில் நமது சபையில் நாம் சேவை செய்யும்போது பொருத்தமாயிருக்கும்போது குடும்பங்களுடன் நமது சம்பந்தங்களை அதிகரிக்க வழிகளிருக்கின்றன. ஒரு தனிப்பட்ட எடுத்துக்காட்டை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்.

எனது ஆரம்பகால வாழ்க்கையில் எனது தகப்பன் எனது ஆயராக ஊழியம் செய்தார். வக்கீல் தொழிலில் மிகவும் கடினமான பரபரப்பாயிருந்தார். சமுதாய விவகாரங்களிலும்கூட அவர் தீவிரமாயிருந்து ஒரு பொதுசொற்பொழிவாளராகவும் இருந்தார். அப்படியே அவர் ஆறு பிள்ளைகளுக்கு தகப்பனாகவுமிருந்தார். அவர் தனது முன்னுரிமைகளில் சரியாக இருந்ததற்காக நான் எப்போதும் எனது தகப்பனுக்கு நன்றியுள்ளவனாயிருந்தேன். எப்போதும் அம்மா அவரது முதல் முன்னுரிமையாயிருந்தார். அவளை அவர் நடத்தியவிதம் அதற்கு நிருபணமாயிருந்தது. அவரது ஒவ்வொரு பிள்ளைகளிடத்திலும் ஒரு உண்மையான அர்ப்பணிப்பை அது தொடரவைத்தது.




எனக்கு சுமார் ஆறு வயதாயிருந்தபோது, ஒரு சிகப்பு வண்டியை ஒரு கிறிஸ்துமஸ் பரிசாக நான் பெற்றேன். அது இதைப்போலவே மிகச் சிறியதாக இருந்தது. சிறிய சிகப்பு வண்டி ஒரு உண்மையான இணைப்பை எனக்கும் என் தகப்பனுக்குமிடையில் ஏற்படுத்தியது. அவரது பரபரப்பான வாழ்க்கையில், அவரது சொந்த தொழில் காரியங்ளைக் குறைத்துக் கொள்ளாமல் அவரது நடவடிக்கைகளில் தனது குடும்பத்தை ஈடுபடுத்திக் கொள்ள அவர் வழிகளைக் கண்டுபிடித்தார்.

1930 ஆண்டுகளில் பெரிய பொருளாதார சீர்குலைவின்போது ஒரு ஆயராக அவரது அதிக சேவையை ஆக்கிரமித்தது. அநேகமான தொகுதி அங்கத்தினர்கள் நம்பிக்கையிழந்த தேவையிலிருந்தார்கள். அவர்களின் வாழ்க்கையைத் தாங்க பொருட்களை அளிக்க ஒரு ஆயராக அவருக்கு பொறுப்பிருந்தது. இது ஒரு ஆயருக்கு, அவரது மகனுக்கு சிறிய சிகப்பு வண்டிக்கு நல்ல வேலையாகத் தோன்றியது. மாவு, சக்கரை, கோதுமை மற்றும் பிற உணவுப்பொருட்கள் வண்டிக் கொட்டகைக் கருகில், குமித்து வைக்கப்பட்டிருப்பதை பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்கு வந்த நான் பார்ப்பேன். அந்த மாலையில் எனது தகப்பனும் நானும் ஒன்றுசேர்ந்திருக்கும் சந்தர்ப்பமிருக்கும் என எனக்குத் தெரியும்.

அவர் வீட்டிற்கு திரும்ப வரும்போது, ஒரு குடும்பத்திற்கு எடுத்துப்போக அந்த சிறு வண்டி உணவுப்பொருட்களால் ஏற்றப்பட்டிருக்கும். தேவையிலிருப்போருக்கு உணவுப்பொருட்களை விநியோகிப்பதில் எங்களின் நல்வாழ்வு பொறுப்பை நிறைவுசெய்வதில் நாங்கள் இருவரும் ஒன்றாக நடந்துகொண்டும் பேசிக்கொண்டும் போனோம்.

தனது தொகுதி அங்கத்தினர்களிடம் ஒரு நல்ல ஆசாரியத்துவ தலைவர் கொண்டிருந்த அன்பையும் நேசத்தையும் நான் நேராகக் காணமுடிந்தது. மிக முக்கியமாக, விலையேறப்பெற்ற நேரத்தை என் தகப்பனுடன் செலவு செய்ய எனக்கு ஒரு சந்தர்ப்பமிருந்தது.

### அடிப்படை முன்னுரிமைகளை முக்கியப்படுத்துதல்

உலகளாவிய தலைமை முதல் பயிற்சி கூட்டத்தில் நாங்கள் போதித்தவைகளை நீங்கள் செய்யும்படி நான் உங்களை ஊக்குவிக்கிறேன். சபையின் அங்கங்கள் அனைத்தும் முன்னேற்றத்தின் வெவ்வேறான நிலையிலிருக்கின்றன மற்றும் அங்கங்கள் அனைத்துக்கும் வெவ்வேறான தேவைகளிருக்கின்றன என்பதை நாங்கள் உங்களுக்கு நினைவுபடுத்துகிறோம். நமது சபை நிகழ்ச்சிகளை நாம் திட்டமிடும்போது குடும்பங்களை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

வீட்டுப்போதகத்தையும் அல்லது விசாரிப்புப் போதகத்தையும் சேர்த்து சபை அழைப்பு ஒன்றிற்கு மேல் சபையின் உங்கள் அங்கத்தினரத்துவத்தின் சுமை கூட்டப்படக்கூடாது என மீண்டும் நாங்கள் உங்களுக்கு எச்சரிக்கையளிக்கிறோம். அடிப்படை முன்னுரிமைகளைப் பின்பற்ற உங்களை ஒழுங்குபடுத்துங்கள், மற்றும் அவரது இராஜ்யத்தில் ஒரு ஊழியக்காரராக உங்கள்

***சபை அழைப்புகளில் நாம் பணியாற்றும்போது, நமது குடும்பங்களுடன் நமது தொடர்பை அதிகரிக்கிறோம்.***



பொறுப்புகளை நீங்கள் செய்ய கர்த்தரின் உணர்த்துதல் எவ்வாறு உங்களை நடத்துகிறது என்பதில் நீங்கள் வியப்புறுவீர்கள்.

அவரது பணியில் கர்த்தருக்கு துணை செய்வதையும், அநித்தியத்தையும் நித்திய ஜீவனையும் மனுஷர்களுக்குக் கொண்டுவருவதையும் எளிதாக்குவதே மறுஸ்தாபிதம் செய்யப்பட்ட சபையின் இறுதியான நோக்கம். குடும்பங்களைப் பலப்படுத்துவதில் ஆரம்பத்தில் நாங்கள் இதை செய்தோம். ஒழுக்க சீர்குலைவு, அரசியல் நிரந்தரமின்மை, பன்னாட்டு அமைதியின்மை, பொருளாதார நிலையின்மை போன்றவைகளின் காலத்தில், குடும்பங்களைப் பலப்படுத்துதல் மற்றும் குடும்பங்களை சீராக வைத்திருத்தலில் நாம் கவனம் செலுத்துவது அதிகரிக்கப்பட்டு பெரிதாக்கப்பட வேண்டும். இரட்சிப்படைதலிலும் பரலோகத்தின் நித்திய இராஜ்யத்தில் மேன்மையடைதலிலும் குடும்பங்களுக்கு உதவுவதே சபையின் முக்கிய நோக்கம்.

**குடும்ப வழிகாட்டிப் புத்தகம்**




அநேக ஆண்டுகளுக்கு முன், குடும்ப வழிகாட்டிப் புத்தகம் என்ற ஒரு விசேஷித்த புத்தகத்தை நாங்கள் வெளியிட்டோம். குறிப்பாக இது புதிதாக மனம்மாறியவர்களுக்கும் சபையில் குறைந்த அனுபவமுள்ளவர்களுக்கும் மற்றும் அனைத்து அங்கத்தினர்களின் உபயோகத்திற்காகவும் வெளியிடப்பட்டது. இதைப் பயன்படுத்துமாறு நாங்கள் ஊக்குவிக்கிறோம். ஒரு உரையுடன் அது ஆரம்பமாகிறது:

“பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபைக்கு அடிப்படை அங்கமாயும், இப்போதும் நித்தியத்திற்கும் மிக முக்கியமான சமுதாய அங்கமுமாய் குடும்பம் இருக்கிறது. அவரது பிள்ளைகளுக்கு சந்தோஷத்தைக் கொண்டுவரவும், ஒரு அன்பான சூழ்நிலையில் சரியான கொள்கைகளைக் கற்றுக்கொள்ளவும், நித்திய ஜீவனுக்கு அவர்கள் ஆயத்தப்படவும் தேவன் குடும்பங்களை ஸ்தாபித்திருக்கிறார். கற்றுக்கொடுக்க, கற்றுக்கொள்ள மற்றும் சுவிசேஷக் கொள்கைகளை பிரயோகிக்க வீடுதான் சிறந்த இடம்.”

இந்த கைப்பிரதியின் பயனுள்ள போதனைகளை திருப்பிப் பார்க்க மீண்டும் நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்.

**இரட்சகரின் எடுத்துக்காட்டு**

தாழ்ந்தவர்களை தூக்கி நிறுத்தி, ஊக்கமிழந்தவர்களுக்கு நம்பிக்கையளித்து, காணாமற்போனவர்களைக் கண்டுபிடித்து, நமது கர்த்தர் மற்றும் இரட்சகர் தனிப்பட்ட முறையில் மக்களுக்கு ஊழியம் செய்தார். அவரது வார்த்தைகளாலும் செயல்களாலும் அவர் அவர்களை நேசித்தார், புரிந்துகொண்டார் மற்றும் பாராட்டினார் என்பதை மக்களுக்குக் காட்டினார். ஒவ்வொரு தனிப்பட்டவர்களிடமும் தெய்வீகத் தன்மையையும் நித்தியத் தகுதியையும் அவர் அடையாளம் கண்டார். மனந்திரும்பும்படி மக்களை அவர் அழைத்தாலும்கூட, பாவிகளை நிந்திக்காமல் அவர் பாவத்தை நிந்தித்தார்.

நாம் ஊழியம் செய்கிறவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அன்பையும் அக்கறையையும் காட்டி நமது இரட்சகரைப்போல, சபைத் தலைவர்களைப்போல அவர்களை நாம் நேசிக்க வேண்டும். நமக்கு அவர் கொடுத்த புனிதப் பொறுப்பில் எனது ஜெபத்தில் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆமேன்.



பிள்ளைகளுடன் கிறிஸ்து, ஹாரி ஆண்டர்சன்; புகைப்படம் - புகாத் போட்டோகிராபி

**குறிப்புகள்**

1. “குடும்பம்: உலகத்திற்கு ஒரு பிரகடனம்,” *லியஹோனா, அக்டோபர். 2004, 49.*
2. “Rejoicing in the Privilege to Serve,” *உலகளாவிய தலைமை பயிற்சிக்கூட்டம், ஜூன் 21, 2003, 24.*
3. *உலகளாவிய தலைமை பயிற்சிக்கூட்டம், ஜூன் 21, 2003, 22.*
4. *லியஹோனா, அக்டோபர் 2004, 49.*
5. வாலிபர்களின் பலத்திற்காக (கைப்பிரதி, 2001), 10.
6. *லியஹோனா, அக்டோபர் 2004, 49.*
7. *லியஹோனா, அக்டோபர் 2004, 49.*
8. குடும்ப வழிகாட்டிப் புத்தகம் (2001), 1.

*குடும்ப வழிகாட்டிப் புத்தகம் (விபர எண். 31180) சபை விநியோக மையங்கள் மற்றும் சேவை மையங்களின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.*

# பெற்றோர்களுக்கு ஒரு பரிசுத்த கடமையிருக்கிறது

**போனி டி. பார்கின்**
**ஒத்தாசை சங்க பொதுத் தலைவர்**



**குடும்ப பொறுப்புகள்**

இந்த சபையின் பெற்றோர்களுக்கும் தலைவர்களுக்கும் ஒரு காரியம் நடைபெறுமென்றால், அது, பரலோகப் பிதாவின் பிள்ளைகளை அவர்கள் பராமரிக்கும்போது ஒவ்வொரு நாளும் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் கர்த்தரின் அன்பை உணருவார்கள் என்பதே. நான் சொல்கிற காரியம் உங்கள் இருதயத்தை தொடுவதாக இல்லாமலிருக்கலாம் ஆனால் ஆவி உங்களிடம் அமர்ந்த சத்தத்தில் சொல்வது உங்கள் இருதயத்தை தொடும். அந்த இனிய உணர்த்துதல்களைப் பின்பற்றுங்கள்.

குடும்பதிற்கான பிரகடனம் கொடுக்கப்பட்ட, 1995 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் நாளை நான் விசேஷமாக நினைவுகூருகிறேன். ஒத்தாசை சங்க பொதுக்கூட்டத்தில் ஆசாரிப்புக் கூடாரத்தில் நான் அமர்ந்திருந்தேன். தலைவர் ஹிங்க்லி இறுதி சொற்பொழிவாளர். "குடும்பம்: உலகத்திற்கு பிரகடனத்தை அவர் உலகத்திற்கு சமர்ப்பித்தார். சபையோர் நிசப்பத்திலிருந்தனர் ஆனால் ஒரு ஆர்வத்தின் உணர்வும் அங்கிருந்தது; "ஆம்- நமது குடும்பத்துடன் நமக்கு உதவி வேண்டுமென்ற பிரதிபலிப்பு இருந்தது!"

அது மிகவும் சரி என்ற எனது உணர்வு எனக்கு நினைவிருக்கிறது. என் கன்னங்கள் வழியே கண்ணீர் வழிந்தது. எனக்கருகிலிருந்த சகோதரிகளை நான் பார்த்தபோது அதே உணர்வுகள் அவர்களுக்கும் இருந்தாற்போன்றிருந்தது. அந்த பிரகடனத்தில் அவ்வளவு அதிகமாக இருந்ததால் ஒரு பிரதியைப்பெற்று அதைப் படிக்க என்னால் காத்திருக்க முடியவில்லை. பெண்ணின் கௌரவத்தை அந்த பிரகடனம் உறுதிசெய்தது. ஒத்தாசை சங்க பொதுக்கூட்டத்தில் பெண்களுக்கு அது முதலில் கொடுக்கப்பட்டது என்பதை நினைக்கும்போது, தலைவர் ஹிங்க்லி பெண்களை மதிக்கிறவர் என்பதை நான் அறிவேன்.

சபைத் தலைவர்களாக நாம் அனைவரும் இங்கிருக்கிறோம். நமக்கு அதிக வேலைகளுண்டு. ஆனால், நமது முதல் கடமை நமது குடும்பத்திற்கே என்பதை உங்களைப்போலவே நானும் நினைக்க வேண்டும். நித்தியத்திற்கும் நாம் எடுத்துப்போகிற சில ஆசீர்வாதங்களில் அவைகளும் ஒன்று என்பதை நாம் நினைவுகூரவேண்டும்! ஆரம்ப கால சபையில் கிர்த்லாந்தில் நியூல் கெ.விட்னி ஒரு ஆயராக இருந்தார். இன்றைய ஆயர்களாகிய உங்களைப்போல அநேக நல்ல காரியங்களைச் செய்வதில் அவரும் அதிகமாக ஈடுபட்டிருந்தார். ஆனால் "*அவரது* குடும்பத்தை ஒழுங்குபடுத்த அவர் கர்த்தரால் கண்டிக்கப்பட்டு கட்டளையிடப்பட்டார். . . ." (கோ.உ 93:50; முக்கியத்துவம்சேர்க்கப்பட்டுள்ளது) சகோதர சகோதரிகளே இந்த ஆலோசனை நம்மனைவருக்கும் பொருந்தும்.

உங்களில் அநேகர் பெற்றோர்களாக அல்லது பாட்டி தாத்தாக்களாக இருக்கிறீர்கள் அல்லது ஒருநாள் ஆகப்போகிறவர்களாயிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் திருமணமானவராயிருந்தால் அல்லது திருமணமாகாதவராயிருந்தாலும் நீங்கள் அனைவரும் குடும்பங்களின் அங்கத்தினர்கள். ஒரு நிமிடம் ஒதுக்கி உங்கள் சொந்த குடும்பத்தைப்பற்றி நினைத்து பாருங்கள். அவர்களை எவ்வாறு நீங்கள் நேசிக்கிறீர்கள்? என்னைப்பற்றி நான் நேசிக்கிற ஒரு காரியம், எனது நான்கு மகன்களும் ஒருவருக்கொருவர் சேர்ந்திருக்க விரும்புவதைப்பற்றி நான் களிகூருகிறேன்.

குடும்பத்தைப்பற்றி பிரகடனம் என்ன கோட்பாட்டைப் போதிக்கிறது? ஒரு பத்தியை நான் மையப்படுத்த விரும்புகிறேன். "தகப்பன்மார்கள் தங்கள் குடும்பங்களை அன்பிலும் நீதியிலும் வழிநடத்த வேண்டுமென்பதும், வாழ்க்கைகான தேவைகளையும் தங்களது குடும்பங்களுக்கான பாதுகாப்பையும் அளிக்க பொறுப்புள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்பதும் தெய்வீகத் திட்டமாகும். தாய்மார்களின் பிரதான பொறுப்பு, அவர்களின் பிள்ளைகளைப் போஷித்து வளர்ப்பதாகும். இந்தப் புனிதமான பொறுப்புகளில் தகப்பன்மார்களும் தாய்மார்களும் ஒருவருக் கொருவர் சமபங்குடையவர்களாக உதவுவது கட்டாயமானது"

"தெய்வீகத் திட்டத்தால்" என்ற வார்த்தைகள் எனக்கு பிடிக்கும். பெற்றோரத்துவம் என்பது அவரது பிள்ளைகளுக்காக நமது பரலோகப் பிதாவின் தெய்வீகத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். பெற்றோர்களாக, தங்களின் குடும்பங்களுக்கு அளிக்கவும் பாதுகாக்கவும் போஷிக்கவும் நமக்கு தெய்வீக பொறுப்பிருக்கிறது.

*அளிக்க, பாதுகாக்க,* மற்றும் *போஷிக்க* என்ற இந்த வழிநடத்தும் நெறிகள் நீதியான பிள்ளைகளை வளர்க்க எவ்வாறு நமக்குதவுகிறது?





## வழங்குதல்

பெற்றோர்கள் "வாழ்க்கைக்கு தேவையானவைகளை" வழங்குகிறார்கள் என பிரகடனம் சொல்கிறது. ஆனால் அந்த தேவைகள் எவை? ஆம், அவைகள் ஒரு தங்குமிடம் மற்றும் அவர்களின் மேஜை மீது உணவு. ஆனால் சுவிசேஷத்தின் திட்டத்தால், அவைகளுக்கு மேலே உள்ளன என நமக்குத் தெரியும். திறமைகளையும் நல்ல குணங்களை வளர்க்கக்கூடிய காரியங்களும் அவற்றில் அடங்கும். அவைகளில் சிலவற்றை காணலாம்.

எவ்வாறு வேலை செய்யவேண்டுமென்று அவர்களுக்கு நாம் கற்றுக்கொடுக்கும்போது நமது பிள்ளைகளுக்கு நாம் அளிக்கிறோம். எனது பேரன் ஜேக்கப்பைப்பற்றி உங்களுக்கு நான் சொல்கிறேன். பள்ளிக்கூடத்திற்கு போக அவனுக்கு விருப்பமில்லை. அவனது தாயார் அநேக காரியங்களை முயற்சித்தார். இறுதியாக அவனுடன் அமர்ந்து அவள் சொன்னாள், "வேலை செய்து பணம் சம்பாதிப்பது அப்பாவின் வேலை. வீட்டிலிருந்து உன்னையும் உனது சகோதர சகோதரிகளைக் கவனித்துக்கொள்வது எனது வேலை. மேலும் பள்ளிக்கூடத்திற்கு போவது உனது வேலை". ஜேக்கப் அந்த கொள்கையை புரிந்துகொண்டபோது அதை அவன் ஏற்றுக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குப் போனான்.

அவர்கள் வீட்டுவேலைகளைச் செய்யவும், தேவைப்படும்போது வீட்டிற்கு வெளியேயும் வேலை செய்யவும் எதிர்பார்த்து நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கிறோம்.

வேலையின் மதிப்பை அவர்களுக்கு கற்றுக்கொடுத்தலால் அவர்களின் வாழ்க்கைக்கு அளிக்க எங்கள் பிள்ளைகளுக்கு நாங்கள் உதவுகிறோம். விரைவிலேயே ஆரம்பியுங்கள்! அவனது தகப்பன் அவனுக்கு கொடுத்த மகத்தான பரிசு, சுதந்தரம் ஏனெனில் வேலை செய்ய அவனுக்கு அவர் கற்றுக்கொடுத்திருந்தார்.

நமது நிதிநிலையை நிர்வகிப்பதுவும் நம் குடும்பங்களுக்கு நன்றாக அளிப்பதற்கும் உதவுகிறது. பெற்றோர்களாக, ஒன்று சேர்ந்து ஒரு வரவுசெலவுக்குள் வாழ திட்டமிடுகிறோம். அவசியத்திற்கும் தேவைக்குமிடையிலுள்ள வித்தியாசத்தை உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுங்கள். காரணமில்லாத நிதி தேவைகளை உங்கள் துணைமீது சுமத்தாதீர்கள். கடனிலிருந்து வெளியே வர தலைவர் கார்டன் பி.ஹிங்க்லி நமக்கு ஆலோசனையளிக்கும்போது, எனக்குத் தெரிந்த ஒரு தகப்பன், திருமணமான தனது பிள்ளைகளுடன் அமர்ந்து அவர்களின் நிதிநிலையைப்பற்றி அவர்களிடம் கேட்டார். அவர்களில் இருவருக்கு அதிகக் கடனிருப்பதைக் கண்டு அவர் ஆச்சரியப்பட்டார். பின்னர், ஒரு திட்டத்தை அமைக்க அவர்களுக்குதவ அவர்களை அவர் கேட்டார்.

கல்வியையும் பயிற்சியையும் பிள்ளைகளுக்குக் கொடுக்க பெற்றோரால் முடியும். அவர்களால் முடிந்த கல்வி அனைத்தையும் அவர்கள் பெற பிள்ளைகளை ஊக்குவிக்கவும். உயர் நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்காமலிருப்பதால் நீண்ட கால கல்வி நிதி கடன் உதவிக்கு சில நாடுகளிலுள்ள வாலிபர்கள் தகுதியில்லாதவர்களாயிருக்கிறார்கள். இன்றைய உலகத்தில் பெற்றோர்கள் தொடர்ந்து படிப்பது மிக முக்கியமாயிருக்கிறது.

## பாதுகாத்தல்

நான் பேசப்போகிறதைப்பற்றிய இரண்டாவது வழிகாட்டுதல் பாதுகாத்தல். எதிலிருந்து பாதுகாத்தல்? உடல் மற்றும் ஆவி இரண்டின் தீங்கிலிருந்து. அவர்கள் தெய்வீகத்தில் தகுதியுள்ளவர்கள் என நமது பிள்ளைகளுக்கு போதிக்கும்போது, ஒரு குடும்பமாக நாம் சபைக்கு போகும்போது, நாம் மாலை நேர குடும்ப நிகழ்ச்சியை நடத்தும்போது, நாம் குடும்ப ஜெபத்தை நடத்தும்போது, நாம் ஒன்று சேர்ந்து வேதத்தைப் படிக்கும்போது நாம் அவர்களை பாதுகாக்கிறோம். அவைகளெல்லாம் நாம் செய்ய முடிகிற எளிதான காரியங்கள் ஆனால் அவைகள் வல்லமையான பாதுகாப்பை அளிக்கிறது என நான் உங்களுக்குச் சாட்சியளிக்கிறேன்.

தங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்க பெற்றோர்களுக்கு ஒரு புனித கடமையிருக்கிறது என பிரகடனம் போதிக்கிறது. ஒரு துணையுடன் அல்லது ஒரு பிள்ளையிடம் அவர்களை தரக்குறைவாக பேசுவது போன்றவைகள், ஒன்றுக்கும் உதவாதவர்களாக நடத்துவது, அல்லது அவர்களிடம் அன்பையும் நேசத்தையும் காட்டாதிருத்தல் போன்ற நிந்தனை உணர்ச்சிகரமாயிருக்கலாம். தங்கள் குடும்பத்தினர்களை அடிக்கும்போது, அல்லது தங்கள் மனைவிமார்களை அல்லது பிள்ளைகளை அறையும்போது தகப்பன்மார்கள் அவர்களை பாதுகாப்பதில்லை. சபையில் சேருவதற்கு முன், அவளது தகப்பன் அவளின் தாயையும் பிள்ளைகளையும் அடிப்பார் என ஒரு தென் ஆப்பிரிக்க சகோதரி சொன்னாள். "இப்போது எங்களை மரியாதையுடனும் இரக்கத்துடனும் நடத்துகிறார் ஏனெனில் நாங்கள் தேவனின் பிள்ளைகள் என்பதை அவர் புரிந்துகொள்கிறார்." என்கிறாள் அவள்.

நண்பர்களை பிள்ளைகள் தேர்ந்தெடுப்பதை தெரிந்துகொள்வதில் பெற்றோர்கள் அவர்களை பாதுகாக்கிறார்கள். அவளின் தகப்பன் அவளின் மாலை நேர நிகழ்ச்சியைப்பற்றிக் கேட்டபோது ஒரு வாலிபப் பெண் கோபமடைந்தாள். அவரின் குடும்பத்திற்கு அவர் பாதுகாவலராயிருக்க வேண்டுமென்று பிரகடனம் சொல்கிறதாலும் அவரின் மகளை அவர் நேசிப்பதால்தான் அவள் பாதுகாப்பாயிருக்கிறாள்



என்பதை ஏன் அவர் உறுதிப்படுத்திக் கொள்கிறார் என அவளுக்கு விளக்கினார்.

பொதுஜன தொடர்பு ஊடகத்தின் செல்வாக்கிலிருந்தும் நம் பிள்ளைகளை நாம் பாதுகாக்கவேண்டும். தொலைக் காட்சியில், திரையரங்குகளில் தங்களின் நண்பர்கள் வீட்டில் உங்கள் பிள்ளைகள் எதைப் பார்க்கிறார்கள் என்பதை தெரிந்துவைத்திருங்கள். உங்கள் வீட்டில் கம்யூட்டர் இருந்தால் அது“ நன்மதிப்பு, அழகானது அல்லது நற்பெயருடையது அல்லது புகழப்பட வேண்டியவைகளுக்கான” (விசுவாசப் பிரமாணம் *1:13*) காரியங்களின் ஒரு கருவியாக இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

ஜீவிக்கும் நமது தீர்க்கதரிசியைப் பின்பற்றுகிறதால் நாம் பாதுகாக்கப்பட்டிருக்கிறோம். மார்மன் புத்தகத்தைப் படிக்க தலைவர் ஹிங்க்லி நமக்கு கொடுத்த ஆலோசனையை ஒரு குடும்பமாகப் பின்பற்றுவதால் நீங்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டீர்கள்? இங்கிலாந்திலிருந்து ஒரு சகோதரியின் ஒரு குறிப்பை சமீபத்தில் நான் பெற்றேன். அவள் எழுதியிருந்தாள்:

“இனிமேல் சபைக்கு போவதில்லை என தீர்மானித்த ஒரு தகப்பனுடன் கடந்த ஆண்டு எனது குடும்பம் போராடிக் கொண்டிருந்தது. தனது வாழ்நாள் முழுவதும் அவர் ஆர்வமுள்ளவராயிருந்து ஆயத்துவத்திலும் அவரிருந்தார். ஆத்திரத்தையும் மனக்கசப்பையும் உணராதிருக்க நான் என்ன செய்யவேண்டுமென கர்த்தரிடம் கதறினேன். நான் மட்டும் பிள்ளைகளுடன் மாலைநேர குடும்ப நிகழ்ச்சியையும் ஜெபத்தையும் நடத்தினேன். வேதப் படிப்பு நேரத்தை பிள்ளைகளுடன் தனியாக நடத்தாமல் வீட்டில் என் கணவர் எங்கிருந்தாலும் அங்கு வைத்து நடத்துமாறு, மார்மன் புத்தகத்தைப் படிக்க கொடுக்கப்பட்ட சவாலால் ஆலயத்தில் நான் உணர்த்தப்பட்டேன். ஆகவே ஒவ்வொரு இரவும் 9 மணிக்கு நாங்கள் ஒன்று சேர்ந்து அவரைத் தேடிக் கண்டுபிடித்தோம். முதலில் இல்லாமலிருந்தாலும் அவர் எங்களுடன் படித்து இப்போது அவர் எங்களுடன் படிக்கிறார். அவர் சபைக்கு வந்து, மாலை நேர குடும்ப நிகழச்சியில் எங்களை சந்தித்து, சுவிசேஷ கலந்துரையாடல்களை நடத்துகிறார். எனது பிள்ளைகள் கர்த்தரின் ஊழியக்காரர்களாக செயல்பட்டு மீட்பின் அன்பின் வார்த்தைகளை எனது கணவரிடம் எடுத்துச் சென்றார்கள். இது எங்கள் குடும்பத்திற்கு ஒரு மகத்தான ஆசீர்வாதம்.”



### போஷித்தல்

கடைசியும் மூன்றாவதுமான வழிகாட்டுதல், போஷித்தல். போஷிப்பதென்பது எதைப்போன்றிருக்கிறது? அது எதைப் போல உணரவைக்கிறது? அது எதைப் போல காட்சியளிக்கிறது? “நம்பிக்கையால், நீடிய சாந்தத்தால், எளிமையால், பொறுமையால் மற்றும் தளராத அன்பால்; இரக்கத்தால்” (கோ.உ *121:41–42*) என்கிற வேத வசனத்தைப்போல போஷிப்பு இருக்கிறது, உணரவைக்கிறது, காணப்படுகிறது. ஒரு சில எடுத்துக்காட்டுகளை நான் உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன்.

அன்பாய் ஒழுக்கப்படுத்துவது போஷித்தல் என நான் நினைக்கிறேன். அவன் கீழ்ப்படியாதபோது அவளது பிள்ளையை ஒரு இளம் தாய் தடுக்கிறாள். அவள் தனது கைகளை அவனது கன்னத்தில் குவிய வைத்து அவனது கண்களில் உற்றுப்பார்த்து சொல்கிறாள், “எனது வார்த்தைகளுக்கு கீழ்ப்படி.” புத்திசாலித்தனமான தெரிந்து கொள்ளுதல் செய்யும்படி நமது பிள்ளைகளுக்கு நாம் கற்றுக் கொடுக்கவேண்டும், ஆனால் அவர்கள் செயல்களின் பலன்களை நாம் நீக்கமுடியாது. நமது பரலோகப் பிதாவின் திட்டத்தின் அடிப்படை சுயாதீனம் என்பதை நினைவுகூருங்கள்.

போஷித்தல் எதைப்போன்று உணரவைக்கிறது? குடும்பங்களில் அநேகமான கற்றுக்கொடுத்தலும் உறவுகள் வளர்க்கப்படுதல்களும், நமது அன்றாட திட்டமிடப்படாத அந்த சுருக்கமான நேரங்களில் நடைபெறுகிறது. ஒருவருக்கொருவர் இணைத்தலும், நமது தினசரி நிகழ்ச்சிகளை பகிர்ந்துகொள்ளுதலும், ஒருவருக்கொருவர் கேட்குதலும் ஊக்குவித்தலும், ஒன்றாக சிரித்தலும் நடைபெறும் இடம் உணவருந்தும் மேஜை. சிரிப்பு



நமது பாரங்களை இலகுவாக்குகிறது. அன்புள்ள தாய்மார்களே, தகப்பன்மார்களே, நீங்கள் நேசிக்கிறவர்களுக்காக ஒரு ஒழுங்கான உணவருந்தும் நேரத்தை அமைத்துக்கொள்ளுங்கள்.

உங்கள் பிள்ளைகள் எல்லோரும் அவர்கள் இஷ்டப்படி வளரும்போது நீங்கள் பெற்றோராயிருந்திருக்கிறீர்களா? இல்லை, நீங்கள் அதை ஒரு போதும் செய்ததில்லை. ஆனால் நித்திய குடும்பங்களை உருவாக்குவதின் இந்த மகத்தான விவகாரத்தில் நாங்களிருக்கிறோம். இங்கிலாந்தில் நானும் என் கணவரும் ஊழியம் செய்து கொண்டிருந்தபோது, எங்கள் மகன்களில் ஒருவனும் அவனது குடும்பமும் எங்களை சந்திக்க வந்திருந்தார்கள். “போஷிக்கப்பட நாங்கள் விரும்பியதால் நாங்கள் இங்கு வந்தோம்” என அவன் சொன்னதை நான் நினைவுகூருகிறேன். ஒரு முறை பெற்றோரானவர்கள் எப்போதுமே பெற்றோர்களே. அது அற்புதமாயிருக்கவில்லையா?! டிசம்பர் மாதத்தில் மார்மன் புத்தகத்தை படித்து முடித்தபின், “என் குமாரனே, கிறிஸ்துவிலே விசுவாசமாயிரு . . . கிறிஸ்து உன்னை உயர்த்துவாராக . . .அவருடைய இரக்கமும் நீடிய சாந்தமும் அவருடைய மகிமை, நித்திய ஜீவன் ஆகியவைகளின் நம்பிக்கையும் உன் மனதில் என்றென்றும் தங்குவதாக,” (மரோனி *9:25*) என்று வயதுவந்த தனது குமாரனுக்கு மார்மன் ஆலோசனையளித்தது, சட்டென என் நினைவுக்கு வந்தது.

போஷித்தல் எதைப்போன்றிருக்கிறது? ஒரு இளம் வயதினரிடமிருந்து ஒரு

புகைப்படம்- ஸ்டீவ் பண்டர்சன், ராபர்ட் காசே, க்ரெய்க் டைமண்ட் மற்றும் மாத்யூ ரீயர்

வார்த்தை பதிலைவிட அதிகமாகப் பெறுவது சிலசமயங்களில் கடினமாயிருக்கிறது. அதை மாற்றக்கூடிய மிகவும் பயனுள்ள ஒரு கேள்வி இங்கிருப்பதை நான் கண்டேன்: "இப்போது உங்களுக்குள்ள மிகப்பெரிய சவால் அல்லது உங்களிருக்கும் போராட்டம் எது?" வாலிபர்கள் பகிர்ந்துகொள்ள இந்த கேள்வி கதவைத் திறக்கிறது. அவர்கள் செய்யும்போது நீங்கள் செவிகொடுங்கள்! நியாயந்தீர்க்கவோ ஆலோசனையளிக்கவோ அல்லது வேறெதையும் செய்யாதீர்கள். வெறுமனே செவிகொடுங்கள். அது உண்டாக்கும் இணைப்புகளையும் கட்டுக்களையும் பார்த்து நீங்கள் வியப்புறுவீர்கள். ஆயர்களே, ஆலோசகர்களே, உங்கள் தொகுதிகளிலுள்ள வாலிபர்களை நீங்கள் பேட்டி காணும்போது இந்த இதே கேள்விகள் மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்கும்.

போஷித்தல் குடும்ப ஜெபத்தைப் போன்றிருக்கிறது. எனது பெற்றோரின் சிறிய அறையில் அவர்களின் படுக்கையில் எனது சகோதர சகோதரிகளுடன் முழங்கால் படியிட்டு, மருத்துவ மனையிலிருந்த எனது தாயாரை ஆசீர்வதிக்க பரலோகப் பிதாவிடம் எனது தகப்பன் வேண்டுவதைக் கேட்டது, நீண்ட நாட்களாக நிலைத்திருக்கும் எனது நினைவுகளில் ஒன்று. தனது இருதயத்தை ஊற்றி எனது தகப்பன் கேட்டது, செவிகொடுக்க பரலோகத்தில் ஒரு தேவனிருக்கிறார் என்பதை நான் தெரிந்துகொள்ள எனக்குதவியது. அவர்களின் பள்ளிக்கூட வேலையைப்பற்றியும் நாளில் அவர்களின் பாதுகாப்பைப்பற்றியும் உங்கள் பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள். அவர்களுக்காக ஜெபிப்பதை அவர்கள் கேட்கும்போது, நமது அன்பையும் எதிர்பார்ப்புகளையும் நமது பிள்ளைகள் தெரிந்துகொள்வார்கள்.

#### குடும்பங்களைப் பலப்படுத்துதல்

நீங்கள் சேவைபுரிந்துகொண்டிருக்கிற குடும்பங்களை, ஒரு தலைவராக நீங்கள் எவ்வாறு பலப்படுத்துவீர்கள் ஆதரிப்பீர்கள்? உங்களின் தொகுதியின் குடும்பங்களுக்கு அளிக்க, பாதுகாக்க, போஷிக்க பலப்படுத்த இந்த அதே வழிநடத்துதல்களையே நீங்கள் பயன்படுத்தலாம்.

ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் பெற்றோரின் இடத்தை எடுத்துக்கொள்ளாமல் அவர்களை கௌரவித்து பெற்றோர்களை தலைவர்கள் ஆதரிக்கிறார்கள். நீங்கள் சரிப்படுத்துபவராக இருக்கலாம், ஆர்வங்கள் போன்றவற்றை நீங்கள் பகிர்ந்து கொள்ளலாம், ஆனால் காரியங்களை செய்ய பெற்றோர்கள் விரும்புகிறதற்கு இணங்குங்கள். "எனது இளம் வயது மகன்கள் கேட்கவிரும்பும் நபர்களில் கடைசி நபர்கள் எனது கணவரும் நானுமே என அடிக்கடி தோன்றியது, என ஒரு தாய் பகிர்ந்துகொண்டாள். சில நேரங்களில், எனது மகன்கள், தங்கள் வயது பிள்ளைகள் குழு செல்வாக்கிற்கு இணங்குவதால் பெற்றோர்களின் சொல் கேட்பதில்லை. எங்கள் பிள்ளைகளுக்கு ஆலோசனையளிக்கும் புத்திசாலித்தனமான சபைத் தலைவர்களுக்காக நான் நன்றியுள்ளவளாயிருக்கிறேன். பெற்றோர்களான எங்கள் பங்கை அவர்கள் ஒருபோதும் எடுத்துக்கொள்வதில்லை. அவர்கள் நாங்கள் சொல்வதைக்கேட்கிறார்கள் ஆனால் எங்களின் வழிகாட்டுதலுக்கு ஆதரவுகொடுத்து எங்களிடம் மீண்டும் வழிகாட்டுகிறார்கள்."

குடும்பங்களாக நம் அனைவருக்கும் தேவைகளுண்டு. தனியான பெற்றோர்களாக இருக்கும் தாய்மார்களைப்பற்றி இதயத்தைத் தொடும் ஒரு சில வார்த்தைகளைப் பேசலாம். அவரது கணவர் வெளிநாட்டிற்கு இராணுவத்துடன் அனுப்பப்பட்ட, ஐந்து பிள்ளைகளின் தாயின் கதையை நான் உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். அவள் கூருகிறாள்:

"பிப்ருவரி ஆரம்பத்தில் என் கணவர் போன பின் எங்களிடம் நல்ல நம்பகமான வாகனங்கள் மூன்றிருந்தது. ஆயினும், நவம்பர் மாதத்தில், அவைகள் பழுதாகி அவைகளை எங்களால் பழுது பார்க்க முடியவில்லை. அதே நேரத்தில், சுவிசேஷம் உண்மையானது என எனது 17 வயது மகனுக்கு நிச்சயமில்லாததால் ஊழியத்திற்குப்போக அவன் திட்டமிடவில்லை என என்னிடம் தெரிவித்தான். எனது வாழ்க்கையில் ஆசாரியத்துவத்தின் ஆசீர்வாதங்கள் எனக்கு தேவையாயிருந்த ஒரு நேரமிருந்தால் அது அப்போதுதான். எப்போது எங்கே அல்லது எந்த எல்லா விபரங்களும் எனக்கு நினைவில்லை, ஆனால் அந்த நேரத்தின்போது ஆசாரியத்துவத்தைத் தரித்திருப்பவர்களைக் கவனித்ததிலிருந்து ஒன்றுக்கு மேலான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டதை நான் தெளிவாக நினைவுகூருகிறேன். எனது வீட்டுப்போதகர்களை நான் அழைத்தால் அவர்கள் அங்கிருப்பார்கள் என்று எனக்கு எப்போதுமே தெரியும். ஒருவர் எனது வாகனத்தை சரிப்படுத்தியிருக்கலாம் ஆனால் அதற்கும் மேலான ஆசாரியத்துவ ஆசீர்வாதத்தை எனக்குக் கொடுத்து வாகனத்தை சரிசெய்கிற ஒருவரை அவர்கள் கண்டுபிடித்தார்கள்.

அர்ப்பணித்த ஆசிரியர்கள் இந்த குடும்பத்திற்கு ஒரு மாற்றத்தை உண்டாக்கினார்கள் மற்றும் குடும்பங்கள் அவர்களுக்கு தெரியவருகிறபோது, குடும்பங்களின் நம்பிக்கையைப் பெறும்போது ஆசாரியத்துவ ஆசீர்வாதங்களை அளித்து அனைத்து தன்மையான பெற்றோர் குடும்பங்களுக்கு அவர்களால் ஒரு மாற்றத்தை உண்டாக்கமுடியும். ஆயர்களே, பிரதான ஆசாரியர்கள் குழு தலைவர்களே, மற்றும் மூப்பர் குழுமத் தலைவர்களே, நமது விசேஷமான திருமணமாகாத சகோதரிகளைப்போல இந்த தாய்மார்களுக்கும் தங்கள் வீடுகளில் ஆசீர்வாதங்கள் தேவையாயிருக்கிறது.

பிரகடனம் கொடுக்கப்பட்டபோது 10 ஆண்டுகளுக்கு முன் தலைவர் ஹிங்க்லி "மெதுவாக கறைபடியும் உலகத்தின் காரியங்களைப்பற்றி எச்சரித்தார். இந்த தீர்க்கதரிசன அறிவிப்பு கர்த்தரின் "குடும்பத்திற்கு சம்பந்தமான தரங்கள், கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளை திரும்ப உறுதிசெய்கிறது" மாறாக, பெண்கள் மற்றும் தாய்மையின் பாத்திரங்களை இந்த உலகம் அதிகாரப்படுத்தப் பார்க்கிறது. அவர்களுக்கு ஒரு முன்னேற்றமான தொழில், தங்களின் நிறுவனங்கள், அவர்களுக்கு ஆதாரங்களிருந்தால் பிள்ளைகள் என்று இன்றைய பெண்களுக்குக் கூறப்படுகிறது. கௌரவமான தாய்மையின் பாத்திரம் விரைவாக நாகரிகமற்றதாகக் கருதப்படுகிறது. நமக்குத் தெரிந்தவையான தெய்வீக வடிவமைப்



*ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் பெற்றோரின் இடத்தை எடுத்துக்கொள்ளாமல் அவர்களை கௌரவித்து பெற்றோர்களை தலைவர்கள் ஆதரிக்கிறார்கள்.*

பால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதை இந்த உலகம் பயமுறுத்துவதை நாம் அனுமதிக்கக்கூடாது என்பதைத நான் தெளிவுபடுத்துகிறேன்.

ஒருசில நிமிடங்கள் உங்களுடன் நான் நேரிடையாகப் பேசுகிறேன். பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபையின் ஒத்தாசைசங்கத்தின் அங்கத்தினர்களாக, குடும்பத்தை போஷித்தலும் ஆதரித்தலும் நமது ஆசீர்வாதமாகவும் நமது பொறுப்புமாக இருக்கிறது. ஒவ்வொருவரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஒவ்வொரு குடும்பமும் பலப்படுத்தப்படுவதும் பாதுகாக்கப்படுவதும் அவசியமாயிருக்கிறது.

ஒரு வீட்டை அமைப்பவளாக மாற எனக்கு முதலில் மகத்தான உதவி எனது தாயிடமிருந்தும் எனது பாட்டியிடமிருந்தும் வந்தது, அடுத்து நாங்கள் வசித்து வந்த இடத்திலுள்ள வெவ்வேறு தொகுதிகளின் ஒத்தாசை சங்க சகோதரிகளிடமிருந்து வந்தது. ஆற்றல்களை நான் கற்றுக் கொண்டேன்; மற்றவர்கள் அதைப்போன்றிருக்க விரும்புகிற ஒரு வீட்டை உருவாக்குவதிலிருந்து வருகிற மகிழ்ச்சியின் மாதிரியை நான் கண்டேன். வீடு குடும்பம் மற்றும் தனிப்பட்ட முன்னேற்ற கூட்டங்களும் நிகழ்ச்சிகளுக்குமான புதிய வழிகாட்டிகள், ஜனுவரி 2006 லிருந்து நடைமுறைக்கு வருகிறது. ஒத்தாசை சங்கத்தில் எல்லா சகோதரிகளும் பங்கேற்கும்படியாக வளைந்து கொடுத்தல் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இப்போது, ஒத்தாசை சங்க தலைவர்களே, நீங்கள் திட்டமிடுகிற கூட்டங்களும் நிகழ்ச்சிகளும் உங்கள் சகோதரிகள் அனைவரின் வீடுகளை பலப்படுத்துகிறதாயிருப்பதை உறுதிசெய்யுங்கள்

குடும்பத்தை ஆதரிக்க விசாரிப்பு போதகம் மற்றொரு வழி. விசாரிப்புப் போதகர்களாயிருக்க உங்கள் யாவருக்கும் சந்தர்ப்பங்களிருக்கிறது என நான் நம்புகிறேன். விசாரிப்புப் போதகர்கள், ஒரு சகோதரியை ஆவியில் மட்டும் பலப்படுத்துகிறதில்லை, ஆனால் போஷிப்பதிலும் தேவைகளை அடைவதிலும் ஒரு தனித்துவமான ஸ்தானத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஒத்தாசை சங்கத் தலைவர்களே, உங்கள் நல்வாழ்வு கூட்டங்களில் செயல்பட்டு உங்கள் விசாரிப்புப் போதகர்களால் அடையாளம் காணப்படுகிற ஆவிக்குரிய உலகப்பிரகாரமான தேவைகளை அறிக்கையளியுங்கள்.

### கிறிஸ்துவின் தூய்மையான அன்பு

திருமணமானவர்களே பழையதை திரும்பிப் பாருங்கள். உங்கள் துணையுடன் காதல் வயப்பட எது உங்களை தூண்டியது? இது உங்களுக்கு ஒரு மன்னிப்பின் இருதயத்தைக் கொடுக்கலாம் என்பதை நினைவுகூருங்கள். அன்பை ஒருவருக்கொருவர் வெளிப்படுத்துங்கள். அவனது தன்னம்பிக்கையை வளர்ப்பதில் ஒரு மனைவி அவளின் கணவரின் வாழ்க்கையில் ஒரு மாறுதலை உண்டாக்கலாம். எளிய மூன்று வார்த்தைகளால் மிகவும் இருளான நாளைக்கூட ஒரு கணவன் பிரகாசமடையச் செய்யலாம்: “நான் உன்னை நேசிக்கிறேன்”. அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள் என்பதைக் காட்டுவது தங்கள் பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் கொடுக்கும் மகத்தான பரிசுகளில் ஒன்றாகும்.

நீதியுள்ள பிள்ளைகளாக வளர்ப்பதில் பெற்றோர்களாக நமது பாத்திரம் அவர்களுக்கு அளிப்பதும், பாதுகாத்தலும் போஷித்தலுமாகும் மற்றும் சமபங்குதாரர்களாக நாம் அதை செய்கிறோம். தலைவர்களாக நாம் அதையே செய்கிறோம். தலைவராயிருப்பது ஒரு கடினமான வேலை. பெற்றோராயிருப்பது கடினமான வேலை. நாம் ஊக்கமிழப்போம் ஆனால் நாம் தொடர்ந்து போய்க் கொண்டிருப்போம். நமது குடும்பங்களிலிருந்தும் நமது சபை கூட்டங்களின் மூலமும் கிறிஸ்துவின் தூய அன்பைப் பற்றி அதிகமாக நாம் கற்றுக்கொள்கிறோம் என நான் நினைக்கிறேன்.

நமக்கு கொடுக்கப்பட்ட நமது பரலோகப் பிதாவின் அன்பை பெற்றோர்களாக தலைவர்களாக நாம் நம் பிள்ளைகளுக்குக் கொடுக்கவேண்டும். மரோனி 8:17 ல் நாம் படிக்கிறோம், “என்றுமுள்ள அன்பாகிய தயாளத்துவத்தினால் நான் நிரப்பப்பட்டிருக்கிறேன்”. இதனுடன் கர்த்தரின் வார்த்தைகளை சேர்த்துக் கொள்ளுங்கள்: “பரிபூரணத்தின் சமாதானத்தின் கட்டான ஒரு போர்வையுடன் தயாளத்தின் கட்டுகளால் உங்களை உடுத்துங்கள்” (கோ.உ 88:125). உங்கள் நடத்தை எல்லாவற்றிலும் தயாளத்தின் போர்வையை போடவும் கிறிஸ்துவின் தூய அன்பால் உங்கள் குடும்பத்தை மூடவும் நான் உங்களை அழைக்கிறேன்.

பரலோகத்திலுள்ள நமது பிதாவின் பிரசன்னத்திற்கு நாம் யாவரும் திரும்பவும் என்றென்றும் அவருடன் வாழவும் குடும்பங்களாக, தலைவர்களாக தயாளத்தின் பொறுப்புடன் நாம் நேசிக்கிறவர்களை நாம் மையப்படுத்த கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆமேன்.

**குறிப்பு**

1. தலைவர் கார்டன் பி.ஹிங்க்லியின், “Rejoicing in the Privilege to Serve”, *உலகளாவிய தலைமை பயிற்சிக் கூட்டம்*, ஜூன் 21, 2003, பக்கம் 22 பார்க்கவும்.
2. “குடும்பம்: உலகத்திற்கு ஒரு பிரகடனம், “*லியஹோனா*, அக்டோபர் 2004, 49.
3. “Stand Strong against the Wiles of the World,” *என்சைன்*, நவம்பர் 1995, 100.

புகைப்படம் - டெரக் ஸ்மித்

# பரலோக வீடுகள்-நித்திய குடும்பங்கள்

**த லை வ ர் தா ம ஸ் எ ஸ் . மா ன் ச ன்**
**பிரதான தலைமையின் முதல் ஆலோசகர்**



**ஒரு நித்திய வீட்டைக் கட்டுதல்**

தாழ்மையின் ஒரு ஆவியுடன் இந்த கூட்டத்தின் இறுதி பேச்சாளராக பிரதான தலைமையின் பிரதிநிதியாகிறேன். மூப்பர் பெட்னர், மூப்பர் பெரி மற்றும் சகோதரி பார்க்கின் ஆகியோரின் கருத்துக்களால் நாம் உணர்த்தப்பட்டு பக்திவிருத்தியடைந்திருக்கிறோம். “ஒரு நீதியான வாழ்க்கைக்கு வீடு ஒரு அடிப்படை மற்றும் எந்த ஒரு அமைப்பும் அதன் இடத்தைப் பிடிக்க முடியாது அல்லது அதன் முக்கியமான செயல்களை நிறைவேற்ற முடியாது”1 என்பதை நாம் நினைவுகூரும்போது நமது சிந்தனைகள் வீட்டிலும் குடும்பத்திலும் நிலைகொள்கிறது.

ஒரு வீடு, மரத்தாலும், செங்கலாலும் அல்லது கல்லாலும் கட்டப்படுவதை விட மேலானது. ஒரு வீடு அன்பாலும் தியாகத்தாலும் மரியாதையாலும் கட்டப்படுகிறது. நாம் கட்டும் வீட்டிற்கு நாம் பொறுப்புள்ளவர்களாயிருக்கிறோம். நித்தியமென்பது ஒரு சிறிய பயணம் இல்லை என்பதால், நாம் புத்திசாலித்தனமாக கட்டவேண்டும். அங்கு அமைதியும் புயலும் இருக்கும், சூரிய ஒளியும் நிழலுமிருக்கும், சந்தோஷமும் துக்கமுமிருக்கும். ஆனால் உண்மையில் நாம் முயற்சித்தால் இங்கு பூமியில் பரலோகத்தின் கொஞ்சத்தை நாம் கொண்டிருக்கலாம். நாம் நினைக்கிற நினைவுகள், நாம் செய்கிற காரியங்கள், நாம் வாழ்கிற வாழ்வுகள் நமது பூமியின் பயணத்தின் வெற்றியை மாத்திரம் ஆதாயப்படுத்தாது, நமது நித்திய இலக்குகளின் வழியையும்கூட குறிக்கிறது.

சில பிற்காலப் பரிசுத்தவான்களின் குடும்பங்களில் தாய், தகப்பன் மற்றும் பிள்ளைகள் அனைவரும் வீட்டிலிருக்கிறார்கள். பிறர் துக்கத்துடன் ஒருவர் பின்னர் மற்றொருவரென தங்களுக்கன்பானவர்களின் இழப்பைக் காண்கிறார்கள். சிலநேரங்களில் ஒரு தனியான நபரை ஒரு குடும்பம் கொண்டிருக்கிறது. அதன் கூட்டு எப்படியிருந்தாலும், குடும்பங்கள் என்றென்றைக்குமிருப்பதால் குடும்பம் தொடர்கிறது.

கர்த்தராகிய முதன்மையான கட்டிட வல்லுநரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம். நாம் எப்படி கட்டவேண்டுமென அவர் நமக்குக் கற்றுக்கொடுக்கிறார். அவர் அறிவித்தார்: “தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த வீடும் நிலைநிற்கமுடியாது.” (மத்தேயு *12:25*). பின்னர் அவர் எச்சரித்தார்:“இதோ என்னுடைய ஆலயம் ஒழுங்கின் ஒரு ஆலயம். . . . குழப்பத்தின் ஒரு ஆலயமல்ல.” (கோ.உ *132:8*).

*1832* ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் *27* ஆம் நாள் கிர்த்லாந்த் ஒஹியோவில் தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித் மூலமாக கொடுக்கப்பட்ட ஒரு வெளிப்படுத்துதலில் போதகர் ஆலோசனையளித்தார்: “உங்களை ஒழுங்குபடுத்திக்கொள்ளுங்கள்; அவசியமான எல்லா காரியங்களையும் ஆயத்தப்படுத்துங்கள்; மற்றும் ஜெபத்தின் ஒரு ஆலயமாக, உபவாசத்தின் ஒரு ஆலயமாக, விசுவாசத்தின் ஒரு ஆலயமாக, கற்றுக்கொள்ளும் ஒரு ஆலயமாக, மகிமையின் ஒரு ஆலயமாக, ஒழுக்கத்தின் ஒரு ஆலயமாக, தேவனின் ஒரு ஆலயமாக, ஒரு ஆலயத்தை ஸ்தாபியுங்கள்.” (கோ.உ *88:119; 109:8* ஐயும் பார்க்கவும்).

அவன் புத்திசாலித்தனமாகவும் சரியாகவும் கட்டக்கூடிய ஒரு அதிக பொருத்தமான வரைபடத்தை நம்மில் யாராவது ஒருவர் எங்கு கண்டுபிடிக்கமுடியும்? அத்தகைய வீடு மத்தேயுவில் மேற்கோள் காட்டியிருக்கிற “கற்பாறையின் மீது” (மத்தேயு *7:24, 25;* லூக்கா *6:48; 3* நெப்பி *14:24, 25* ஐயும் பார்க்கவும்) கட்டப்பட்ட ஒரு வீடு என்ற கட்டிட விதிமுறைகளைப் பின்பற்றுவதாகவும், துயரங்களின் மழைகளையும், எதிர்ப்புகளின் வெள்ளத்தையும், நமது மாறிவரும் சவாலின் உலகத்தில் எங்கும் காணப்படும் சந்தேக புயலையும் தாங்கக்கூடியதாகவும் அந்த வீடு இருக்கும்.

“ஆனால், ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கான வழிகாட்டுதல்கள் அந்த வெளிப்படுத்துதலில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அது பொருத்தமாயிருக்கிறதா?” என சிலர் கேட்கலாம்.

நான் பதிலளிப்பேன்: “ ‘நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?’ (1 கொரிந்தியர் *3:16*) என்று பவுல் அறிவிக்கவில்லையா?”

நமது கட்டிட திட்டத்திற்கு ஒரு தலைமை கட்டிட ஒப்பந்தக்காரராக கர்த்தர் இருக்கட்டும். பின்னர் முழுத் திட்டத்தின் ஒரு முக்கியமான பகுதிக்கும் நாம் ஒவ்வொருவரும் துணை ஒப்பந்தக்காரர்களாக இருக்கலாம். இந்த வழியில் நம் அனைவரும் கட்டிடக்காரர்களாக இருக்கிறோம். நமது வீடுகளை நாம் கட்டுவதோடு, நமது சபை அழைப்புகளில் உண்மையுள்ளவர்களாகவும் ஆற்றல்மிக்கமுள்ளவர்களாகவும் சேவை செய்வ



தால் இங்கே பூமியில் தேவனுடைய இராஜ்யத்தைக் கட்ட உதவவும் நமக்கு பொறுப்பிருக்கிறது. தேவனிடமிருந்து வழிகாட்டுதல்களையும், வாழ்க்கையிலிருந்து பாடங்களையும், நாம் கட்ட ஆரம்பிக்கும்போது தியானிக்கக் கூடிய குறிப்புகளையும் நான் கொடுக்கிறேன்.

**ஜெபிக்க முழங்கால்படியிடவும்**

"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழுஇருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் வழிகளையெல்லாம் செவ்வைப்படுத்துவார்." (நீதிமொழிகள் *3:5–6*). அப்படியே தாவீதின் மகனான, இஸ்ரவேல்களின் இராஜாவான ஞானமுள்ள சாலமோனும், பேசினான்.

இதைப்பற்றி அமெரிக்கக் கண்டத்தின், நெப்பியின் சகோதரரான யாக்கோபு அறிவித்தான்: "மனஉறுதியுடனே கூட தேவனை நோக்கிப்பாருங்கள், அதிக விசுவாசத்துடனே அவரிடம் ஜெபம் செய்யுங்கள்."(யாக்கோபு *3:1*).

ஒரு வறண்ட நிலத்திற்கு தெளிந்த நீர் வருவதைப்போல, இந்த தெய்வீக உணர்த்துதலான ஆலோசனை நமக்கு இன்று வருகிறது. தொந்தரவான காலங்களில் நாம் வாழ்கிறோம்.

நாம் வாழ்கிற உலகத்தையும் அது நமக்குக் கொடுக்கக்கூடிய பிரச்சினைகளையும் ஒரு சில தலைமுறைகளுக்கு முன் யாரும் கற்பனை செய்து பார்த்திருக்கமாட்டார்கள். ஒழுக்கக்கேடுகள், ஆபாசப் படங்கள், வன்முறைகள், போதை மருந்துகள் மற்றும் நவீன சமுதாயத்தைப் பாதிக்கக்கக்கூடிய மிக அதிகமான பிற தீமைகளால் நாம் சூழப்பட்டிருக்கிறோம். "உலகத்தால் கறைபடியாதபடிக்கு,"(யாக்கோபு *1:27*) நம்மைப் பாதுகாத்துக்கொள்வது மட்டுமல்ல, ஒரு நாள் நமது பரலோகப் பிதாவுடன் நாம் சேர்ந்து வாழ்வதற்காக திரும்பிப்போக, நம்மை சூழ்ந்திருக்கிற கொந்தளிக்கும் பாவக் கடலின்வழியே பாதுகாப்புடன் கடந்துசெல்ல நமக்கு பொறுப்புள்ள நமது பிள்ளைகளையும் பிறரையும் வழிநடத்தவும் நமக்கு சவாலிருக்கிறது, பொறுப்புமிருக்கிறது.

நமது சொந்த குடும்பங்களுக்கு பயிற்சியளிக்க நமது பிரசன்னமும், நமது நேரமும், நமது சிறந்த முயற்சிகளும் தேவையாயிருக்கிறது. நமது பயிற்சிகளில் ஆற்றலாயிருக்க, நமது குடும்ப அங்கத்தினர்களுக்கு நமது எடுத்துக்காட்டுகளில் நாம் துணிச்சலுள்ளவர்களாக இருக்கவேண்டும் மற்றும் ஒவ்வொரு அங்கத்தினரிடமும் நாம் தனிப்பட்ட நேரத்தை ஒதுக்கவேண்டும், அப்படியே ஆலோசனைக்கும் வழிநடத்துதலுக்கும் நாம் நேரத்தை ஒதுக்கவேண்டும்.

வழக்கமாக நமக்கு முன்னாலிருக்கிற வேலையினால் நாம் திகைத்து நிற்கிறோம். ஆயினும், உதவி தயாராயிருக்கிறது. அவர்களுக்கு வழிகாட்ட நாம் உதவிக்காக நாடும்போது, அவரது பிள்ளைகள் ஒவ்வொருவரையும் அறிந்திருக்கிற அவர் நமது ஊக்கமான உள்ளத்தைத் தொடும் ஜெபத்திற்கு பதிலளிப்பார். அத்தகைய ஜெபம் அதிகமான பிரச்சினைகளைத் தீர்க்கும், அதிக பாடுகளுக்கு நிவர்த்தியளிக்கும், அதிமான பாவங்களைத் தடுக்கும் மற்றும் மனித ஆத்துமா வேறெந்த வழியையும்விட பெரிய சமாதானத்தையும் திருப்தியையும் அதிகமாகக் கொண்டுவரும்.

நமது சொந்தக் குடும்பங்களுக்கு தேவையான அத்தகைய வழிநடத்துதலுக்கும் அப்பால், ஒரு ஆயராக, அல்லது ஆலோசனையாளராக, ஒரு ஆசாரியத்துவ குழுமத் தலைவராக அல்லது ஒரு துணைச்சங்க தலைவராக மற்றவர்கள்மேல் பொறுப்புள்ள பிறஸ்தானங்களிலும் நாம் அழைக்கப்படுகிறோம். மற்றவர்களின் வாழ்க்கையில்



***போதகர் ஆலோசனையளித்தார்: "உங்களை ஒழுங்குபடுத்திக்கொள்ளுங்கள்; அவசியமான எல்லா காரியங்களையும் ஆயத்தப்படுத்துங்கள்; மற்றும் ஜெபத்தின் ஒரு ஆலயமாக, உபவாசத்தின் ஒரு ஆலயமாக, விசுவாசத்தின் ஒரு ஆலயமாக, ஒரு ஆலயத்தை ஸ்தாபியுங்கள்."***

புகைப்படம்- புசாத் புகைப்படம் மற்றும் மத்தேயு ரியர்; கிறிஸ்துவின் தோற்றம்- ஹெயின்ரிச் ஹோப்மான், சி.ஹாரிசன் கான்ராய் கம்பெனிக்கு நன்றி.

ஒரு வித்தியாசத்தை உண்டுபண்ணக்கூடிய சந்தர்ப்பமும் உங்களுக்கிருக்கிறது. பகுதி அங்கத்தினராயிருக்கிற அல்லது ஆர்வம் குறைந்த குடும்பங்கள்; தங்களின் பெற்றோர்களிடமிருந்து பிரிந்துவந்தவர்கள், அவர்களுடைய வேண்டுகோள்களையும் ஆலோசனைகளையும் மதிக்காதவர்கள் போன்றோர் அங்கிருக்கலாம். அத்தகைய ஒரு சூழ்நிலையிலிருக்கும் ஒருவரின் வாழ்க்கையில் ஒரு வித்தியாசத்தை உண்டுபண்ண கர்த்தரின் கரங்களில் நாம் ஒரு கருவியாயிருக்கலாம். நமது பரலோகப் பிதாவின் நடத்துதலில்லாமல் எப்படியாயினும் நாம் அழைக்கப்பட்டிருக்கிற எல்லாக் காரியங்களையும் நம்மால் செய்யமுடியாது. அத்தகைய உதவி ஜெபத்தின் மூலமாக வருகிறது.

நமது வாழ்க்கையிலும் நமது நாடுகளிலும் சமாதானத்தையும் திருப்தியையும் கொண்டுவர, குற்றங்களையும் சட்டத்திற்கு கீழ்ப்படியாமையையும் குறைக்க நாட்டுக் குடிமக்களாக நாம் என்ன செய்ய முடியும் என அமெரிக்காவின் ஒரு புகழ்பெற்ற நீதிபதியிடம் கேட்கப்பட்டது. சிந்தித்தவராக அவர் பதிலளித்தார், “குடும்ப ஜெபம் என்ற பழைய நாகரீகத்திற்கு நாம் திரும்ப நான் ஆலோசனையளிப்பேன்.”



ஒரு மக்களாக, நம்மிடையே குடும்ப ஜெபம், நடைமுறையிலில்லாத ஒன்றில்லை என்பதற்காக நாம் நன்றியுள்ளவர்களாக இல்லையா? “குடும்பமாக ஒன்றுசேர்ந்து ஜெபிக்கும் குடும்பம் ஒன்றுசேர்ந்திருக்கிறது” என்ற அடிக்கடி சொல்லப்படும் பழமொழிக்குப் பின்னால் ஒரு உண்மையான அர்த்தமிருக்கிறது.

“உங்கள் மனைவிகளும் உங்கள் பிள்ளைகளும் ஆசீர்வதிக்கப்படும்படி, உங்கள் குடும்பங்களில் எப்பொழுதும் என் நாமத்தினாலே பிதாவினடத்தில் ஜெபியுங்கள்” (நெப்பி 18:21) என அவர் சொன்னதில் கர்த்தரே குடும்ப ஜெபத்தை செய்யும்படி அறிவுறுத்தினார்.

பெற்றோர்களாக, ஆசிரியர்களாக, தலைவர்களாக நமது எந்த பொறுப்பிலும் அநித்தியத்தின் வழியே செல்லும் இந்த அபாயகரமான சாத்தியமான பயணத்தில் நமக்கு பொறுப்புள்ளவர்களை வழிநடத்துதலில் நமக்குதவுவதில் பரலோகத்தின் துணையில்லாமல் நம்மால் முயற்சிக்க முடியாது.

நமது குடும்ப ஜெபங்களையும் நமது தனி ஜெபங்களையும் தேவனிடத்தில் நாம் ஒப்புவிக்கும்போது, அவரில் விசுவாசத்துடனும் அவரில் நம்பிக்கையுடனும் அதை அப்படி செய்வோம். ஜெபிக்க முழங்கால்படியிடவும்.

### சேவை செய்ய முன்னுக்கு வரவும்

நமது எடுத்துக்காட்டுக்கு கர்த்தரின் பக்கம் நாம் திரும்புவோம். மனிதர்களுக்கு மத்தியில் அவர் ஊழியம் செய்தபோது, நன்மையின் ஒரு பிரகாசமான ஒளியைப்போல இயேசுவின் வாழ்க்கையிருந்தது. சப்பாணிகளின் கால்களுக்கு அவர் பலத்தைக்கொண்டுவந்தார், குருடர்களின் கண்களுக்கு பார்வையையும், செவிடர்களின் செவிகளைத் திறந்து மரித்தவர்களின் சரீரத்திற்கு ஜீவனையும் கொண்டுவந்தார்.

அவரது உவமைகள் அவரது வல்லமையைக் காட்டியது. நல்ல சமாரியனை வைத்து அவர் போதித்தார்: “பிறனிடத்திலும் அன்புகூருவாயாக” (லூக்கா 10:30–35 பார்க்கவும்). விபாச்சரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயிடம் அவரது இரக்கத்தின்மூலமாக, அவர் கருணையையும் புரிந்துகொள்ளுதலையும் போதித்தார் (யோவான் 8:3–11 பார்க்கவும்). தாலந்துகளின் அவரது உவமையில், பரிபூரணத்திற்கு நம்மை முன்னேற்றிக்கொள்ளவும் முயற்சிக்கவும் நமக்கு அவர் போதித்தார் (மத்தேயு 25:14–30 பார்க்கவும்). ஒரு நித்திய குடும்பத்தைக் கட்டுவதில் நமது பாத்திரத்திற்காக அவர் நம்மை நன்றாக ஆயத்தப்படுத்த முடியுமா.

ஒரு ஆசாரியத்துவ தலைவராகவோ அல்லது துணைச் சங்க நிறுவனத்தில் ஒரு அதிகாரியாகவோ நாம் ஒவ்வொருவரும் அவனது அல்லது அவளது புனித அழைப்பிற்கு நாம் பொறுப்புள்ளவர்களாயிருக்கிறோம். நாம் அழைக்கப்பட்ட பணிக்கு நாம் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். கோட்பாடும் உடன்படிக்கைகளும் 107:99 ல் கர்த்தர் சொன்னார், “ஆகவே, இப்போது ஒவ்வொரு மனிதனும் தனது கடமையைக் கற்று அவன் நியமிக்கப்பட்ட அலுவலில் முழு சிரத்தையோடு செயல்படக்கடவன்”. நமது சபை அழைப்புகளில் நமக்கு பொறுப்பளிக்கப்பட்டவர்களை நாம் உண்மையில் ஆசீர்வதித்து அவர்களின் குடும்பங்களை பலப்படுத்துகிறோம். அப்படியாக, நமது குடும்பங்களிலும் நமது சபை அழைப்புகளிலும் நாம் செய்யும் பணிகள் நித்திய விளைவுகளைக் கொண்டிருக்கும்.

அநேக ஆண்டுகளுக்கு முன், சால்ட் லேக் சிட்டியின் கீழ் பகுதியில் அமைந்திருக்கிற ஆயிரத்திற்கும் அதிகமான அங்கத்தினர்களைக் கொண்டிருந்த ஒரு பெரிய பலதரப்பட்டவர்களிருந்த ஒரு பெரிய தொகுதியில் ஒரு ஆயராக எண்ணிலடங்கா சவால்களை நான் எதிர்கொண்டேன்.

ஒரு ஞாயிற்றுக் கிழமை நண்பகலில், எங்களது தொகுதி எல்லைகளுக்குள்ளிருந்த ஒரு மருந்துக் கடையின் சொந்தக்காரரிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு எனக்கு வந்தது. அன்று அதிகாலை அவரது கடைக்கு ஒரு வாலிபன் வந்ததாகவும், அங்கிருந்து ஐஸ் கிரீம்

புகைப்படம்- ராபர்ட் காசே

ஒன்றை வாங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார். அதற்கான பணத்தை ஒரு உறையிலிருந்து எடுத்துக் கொடுத்துவிட்டு அங்கிருந்து அவன் போனபோது அவன் அந்த உறையை மறந்துபோய் அங்கேயே விட்டுவிட்டுப்போனான். கடையின் சொந்தக்காரர் அதைப் பார்க்க நேரிட்டபோது அது உபவாசக் காணிக்கையின் உறை என்றும் அதின் மேல் எங்கள் தொகுதியின் பெயரும் தொலைபேசி எண்ணும் அச்சிடப்பட்டிருந்ததையும் அவர் கண்டார். அவரது கடைக்கு வந்த பையனைப்பற்றி அவர் விவரித்தபோது உடனேயே அந்த வாலிபனை நான் அடையாளம் கண்டுகொண்டேன். ஒரு ஆர்வம் குறைந்த குடும்பத்திலிருந்து வருகிற ஒரு இளம் உதவிக்காரன் அவன்.

தேவையிலிருப்போர்களுக்கென்று வைத்திருக்கிற உபவாசக் காணிக்கையை எங்கள் உதவிக்காரர்களில் யாராவது ஒருவன் எடுத்து, ஞாயிற்றுக் கிழமை ஒரு கடைக்குப்போய் அந்த பணத்தில் தனக்கென்று எதையாவது வாங்கினான் என்பதை நினைத்துப் பார்ப்பதில் நான் முதலாவதாக அதிர்ச்சியடைந்தேன். அந்த நண்பகலில் அவனை சந்தித்து, சபையின் புனிதமான அந்த நிதிப்பணத்தைப்பற்றியும் ஒரு உதவிக்காரனாக அந்த நிதிப்பணத்தை அவன் சேகரித்து அதைப் பாதுகாப்பது அவனது கடமை என்றும் அவனுக்கு கற்றுக்கொடுக்க நான் தீர்மானித்தேன்.

அவனது வீட்டிற்கு நான் வண்டியோட்டிக்கொண்டுபோகும்போது, அந்த சூழ்நிலையை ஒழுங்குபடுத்த நான் என்ன சொல்லவேண்டுமென்பதற்கு வழிகாட்டுதலுக்காக அமைதியாக ஒரு ஜெபத்தை நான் ஏறெடுத்தேன். நான் அங்கு போய் சேர்ந்து கதவைத் தட்டினேன். பையனின் தாய் கதவைத் திறந்து நடுக்கூட அறைக்கு நான் வரவேற்கப்பட்டேன். அந்த அறையில் வெளிச்சம் மிகக்குறைவாக இருந்த போதிலும், அது எவ்வளவு அசுத்தமாயிருந்தது என்பதை என்னால் காணமுடிந்தது. ஒரு சில இருக்கைகள் மோசமான நிலையிலிருந்தன. அந்த தாயே மிகவும் நலிந்த நிலையிலிருந்தார்.

இங்கே ஒரு குடும்பம் தேவையிலிருக்கிறது என்பதை நான் கண்டபோது, அன்று காலை அவளது மகனின் செய்கையின்மீது நான் கொண்டிருந்த வெறுப்பு என் சிந்தனையிலிருந்து மறைந்துவிட்டது. வீட்டில் ஏதாவது உணவு இருக்கிறதா என்று அந்த தாயிடம் கேட்க நான் உணர்த்தப்பட்டேன். எதுவுமில்லை என்பதை அழுகையுடன் அவள் ஒப்புக்கொண்டாள். சிலகாலமாக அவளது கணவர் வேலையில்லாமலிருப்பதால் உணவுக்கு மாத்திரம் அவர்களுக்கு உடனடித் தேவையில்லை, அந்த சிறிய வீட்டிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படாமலிருக்க அந்த வீட்டிற்கு வாடகை செலுத்தவும் அவர்களுக்கு பணம் தேவையிருப்பதாக அவள் என்னிடம் கூறினாள்.

உபவாச காணிக்கை பணத்தைப்பற்றிய காரியத்தை நான் எடுக்கவேயில்லை, ஏனெனில் அந்த மருந்து கடைக்கருகில் நின்றபோது அந்த பையன் மிகப் பசியாயிருந்திருப்பான் என்பதை நான் உணர்ந்தேன். மாறாக, சாப்பிட உணவையும் அவர்கள் தங்குவதற்கு ஒரு இடத்தையும் அந்த குடும்பத்திற்கு உடனேயே நான் ஏற்பாடு செய்தேன். அதற்கும் மேலாக, வருங்காலத்தில் அவரது குடும்பத்திற்கு அவரால் வருமானம் வர, தொகுதியிலுள்ள ஆசாரியத்துவ தலைவர்களின் உதவியுடன் அவளின் கணவருக்கு ஒரு வேலையை நாங்கள் ஏற்பாடு செய்தோம்.

ஆசாரியத்துவ, துணை சங்கத் தலைவர்களாக, நமது அழைப்புகளை நிறைவேற்றவும் நமது பொறுப்புகளை நிறைவேற்றவும் கர்த்தரின் உதவிக்கு நாம் தகுதியுள்ளவர்கள். அவரது உதவியை நாடுங்கள், உணர்த்துதல் உங்களுக்கு வரும்போது, எங்கே போவது, யாரைப் பார்ப்பது, என்ன சொல்வது, அதை எப்படி சொல்வது என்பதற்கு சம்பந்தமான அந்த உணர்த்துதலில் செயல்படுங்கள். ஒன்றைப்பற்றி நாம் மீண்டும் மீண்டும் சிந்திக்கலாம் ஆனால் அதை செயல்படுத்தும்போதே அவர்களின் வாழ்வுகளை நாம் ஆசீர்வதிக்கிறோம்.

நமக்கு பொறுப்பளிக்கப்பட்டவர்களுக்கு நாம் மெய்யான மேய்ப்பர்களாகுவோம். லைசிடாஸ் என்ற தனது கவிதையில் ஜான் மில்டன் எழுதினார்: பசியுள்ள ஆடுகள் மேல்நோக்கிப் பார்த்து, அவைகள் போஷிக்கப்படும்” (வரி *125*) எசேக்கியல் தீர்க்கதரிசியிடம் கர்த்தரே சொன்னார், “மந்தையையே மேய்க்காமல் போகிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ.” (எசேக்கியல் *34:2–3*).

மந்தையை மேய்ப்பது நமது பொறுப்பு ஏனெனில் விலையேறப்பெற்ற ஆடுகள், இந்த இளம் ஆட்டுக்குட்டிகள், எங்கும் காணப்படுகிறது. நமது வீட்டில் நமது சொந்த குடும்பங்களில் நமது உறவினர் குடும்பங்களின் வீடுகளில் மற்றும் நமது சபை அழைப்புகளில் நமக்காக காத்துக்கொண்டிருக்கின்றன. இயேசு நமது உதாரண புருஷர். அவர் சொன்னார், “நானே நல்ல மேய்ப்பன், நான் எனது ஆடுகளை அறிந்திருக்கிறேன்.” (யோவான் *10:14*). மேய்ப்பதற்குரிய ஒரு பொறுப்பை நாம் கொண்டிருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் சேவை செய்ய முன்வருவோமாக.



**நமது குடும்பங்களிலும் நமது சபை அழைப்புகளிலும் நாம் செய்யும் பணிகள் நித்திய விளைவுகளைக் கொண்டிருக்கும்.**

### காப்பாற்ற முயற்சிப்போம்

வாழ்க்கைப் பாதையின் வழியான பயணத்தில் பாவம் செய்கிறதிலிருந்து சிலர் துன்பப்படுவார்கள். சுற்றுவழியை தேர்ந்தெடுத்ததால் இறுதியாக துக்கத்திற்கு

நடத்துகிறதை கண்டுபிடிக்கக்கூடிய, நித்திய ஜீவனுக்கு நடத்தும் பாதையிலுள்ள பாதை குறிப்புகளிலிருந்து சிலர் விலகிப்போவார்கள். வேறுபாடுகள், கவனக்குறைவு, சுயநலம் மற்றும் மனித வாழ்க்கையில் தீங்கை விளைவிக்கக்கூடிய பாவத்தை செய்வார்கள். விளக்க முடியாத காரணங்களால் பின்னர் துக்கத்தையும் பாடுகளையும் மட்டும் விளைவிக்கும் சோதனையை அவர்கள் பின்பற்றியிருக்கிறார்கள் என்பதை தெரிந்துகொள்ளும் சிலர் வேறுமாதிரியான பாதையை தேர்ந்தெடுப்பார்கள்.

கிறிஸ்துவண்டையிலிருந்து வழிவிலகிப்போனவர்களை பிரதான தலைமை கவனத்தில் கொண்டுவந்து, “திரும்பி வர ஒரு அழைப்பு” என்ற தலைப்பில் ஒரு விசேஷமான அறிக்கையளித்தார்கள். இந்த வேண்டுகோள் அந்த செய்தியில் அடங்கியிருந்தது:

சபையின் முழு ஐக்கியத்திற்கு வெளியே உங்களை எக்காரணத்தைக் கொண்டும் பார்த்தால் திரும்பி வாருங்கள் என நாங்கள் சொல்வோம். ஒரு சமயம் உங்களுக்கு தெரிந்த சந்தோஷத்திற்கு திரும்பி அதில் பங்கேற்க உங்களை அழைக்கிறோம். அநேகர் தங்கள் கரங்களை நீட்டி உங்களை வரவேற்று, உங்களுக்கு உதவி, உங்களுக்கு ஆறுதலை அளிப்பதை நீங்கள் காண்பீர்கள்.

“உங்கள் பலம், அன்பு, நேர்மை, அர்ப்பணிப்பு சபைக்கு தேவையாயிருக்கிறது. சபை அங்கத்தினரத்துவத்தின் முழு ஆசீர்வாதத்திற்கு ஒரு நபர் திரும்ப அந்த பாதை நிலைத்ததும் நிச்சயமுமானது மற்றும் அதைச் செய்ய விரும்புகிற அனைவரையும் வரவேற்க நாங்கள் ஆயத்தமாய் நின்றுகொண்டிருக்கிறோம்.”

காப்பாற்ற நாடுகிற உங்களின் தனிப்பட்ட தருணம் ஒருவேளை அடிக்கடி திரும்ப திரும்ப வருகிற காட்சி ஒன்று நெருக்கமாகக் கொண்டுவரும். ஜாக் என்ற பெயருடைய ஒரு மகனைக் கொண்ட ஒரு குடும்பத்தை பார்ப்போம். ஜாக்கின் ஆரம்ப கால வாழ்க்கை முழுவதிலும் அவனது தகப்பனுக்கும் அவனுக்கும் மோசமான வாக்குவாதங்கள் நடந்திருந்தது. அவனுக்கு 17 வயதாயிருந்தபோது ஒரு நாள் அவர்களுக்குள் ஒரு குறிப்பிடத்தக்க வாக்குவாதம் ஏற்பட்டது. ஜாக் தன் தகப்பனிடம் சொன்னான், “இதை இனிமேலும் என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. நான் வீட்டை விட்டு வெளியேறுகிறேன். இனிமேல் ஒருபோதும் நான் வீட்டிற்கு திரும்பமாட்டேன்!” அவன் தன் அறைக்குச் சென்று தனது பொருட்களை ஒரு பையில் வைத்தான். வீட்டிலிருக்கும்படி அவனது தாயார் அவனைக் கெஞ்சினாள் ஆனால் அதைக் கேட்கமுடியாத அளவுக்கு அவன் மிகக் கோபமாயிருந்தான். வாசலுக்கருகில் அவளை அழவிட்டு அவன் வெளியேறினான்.

வெளிப்புற வாசலைவிட்டு வெளியேறுகிறபோது அவனது தகப்பன் அவனை



அழைக்கிறதை அவன் கேட்டான்: “ஜாக், நீ வெளியேறுவதற்கான குற்றச்சாட்டின் ஒரு பெரிய பங்கு என்னையே சேரும் என எனக்குத் தெரியும். அதற்காக நான் உண்மையிலேயே வருந்துகிறேன். நீ எப்போதாவது வீட்டிற்கு திரும்ப விரும்பினால் நீ எப்போதுமே வரவேற்கப்படுவாய் என்பதை நீ தெரிந்துகொள்ள நான் விரும்புகிறேன். மேலும் நான் ஒரு நல்ல தகப்பனாக இருக்க முயற்சிப்பேன். நான் உன்னை நேசிக்கிறேன், நான் உன்னை எப்போதுமே நேசிப்பேன் என்பதை நீ தெரிந்துகொள்ளவேண்டும்.”

ஜாக் ஒன்றுமே பேசாமல் பேருந்து நிலையத்திற்கு சென்று தொலைவான இடம் ஒன்றிற்கு பயணச் சீட்டை வாங்கினான். பேருந்தில் அமர்ந்துகொண்டு, மைல்கள் கடந்து சென்றுகொண்டிருந்தபோது, அவனது தகப்பனின் வார்த்தைகளுக்கு அவனது சிந்தனை திரும்பியது. அவனது தகப்பனிடமிருந்ததை சொல்ல அவருக்கு எவ்வளவு தைரியமும் எவ்வளவு அன்புமிருந்திருக்கவேண்டுமென அவன் உணர ஆரம்பித்தான். தகப்பன் மன்னிப்புக் கேட்டார். அவர் அவனைத் திரும்ப அழைத்தார் மற்றும் அந்த கோடை காற்றில் “நான் உன்னை நேசிக்கிறேன்” என்ற அவரது வார்த்தைகளை அவன் காதுகளில் ரீங்காரமிட வைத்தார்.

அடுத்த செயலை அவன்தான் செய்யவேண்டுமென்பதை ஜாக் தெரிந்திருந்தான். அவனுக்குள் சமாதானத்தைக் காண, தகப்பன் அவனிடம் காட்டிய அதே வகையான முதிர்ச்சியையும், நல்ல குணத்தையும், அன்பையும் அவனது தகப்பனிடம் அவன் செய்து காட்டுவதே ஒரே வழி என்பதை அவன் உணர்ந்தான். ஜாக் பேருந்தைவிட்டு இறங்கினான். அவன் திரும்பப் போக பயண சீட்டை வாங்கி வீட்டிற்கு பயணத்தை ஆரம்பித்தான்.

நள்ளிரவில் அவன் வீட்டை அடைந்து வீட்டிற்குள் சென்று விளக்கைப் போட்டான். அங்கு நாற்காலியில் அவனது தகப்பன் தன் தலையை தொங்கப்போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார். அவர் தன் தலையை தூக்கி ஜாக்கைப் பார்த்தபோது, அவர் நாற்காலியிலிருந்து எழுந்தார், அவர்கள் இருவரும் கட்டி அணைத்துக் கொண்டார்கள். பின்னர் ஜாக் சொன்னான், “ நான் வீட்டிலிருந்த அந்த பழைய ஆண்டுகளே என் வாழ்நாளில் சந்தோஷமான நாட்கள்.”

உடைந்த குடும்பங்களிலிருந்தும் சிதறிய வீடுகளிலிருந்தும் விளையும் காணாமற்போன திரளானோரில் ஒருவனாக அவன் மாறுவதற்கு முன், தனது கோபத்தை அடக்கி பெருமையை கட்டுப்படுத்தி தனது மகனை மீட்க நாடின ஒரு தகப்பனை இங்கே காண்கிறோம். அன்பே இணைக்கும் கயிறு, குணப்படுத்தும் களிம்பு; அன்பு எப்போதுமே உண

புகைப்படம்- ராபர்ட் காசே; கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்- சைமன் டிவே, பிரதி எடுக்கப்படக்கூடாது.



*நமக்கு பொறுப்பளிக்கப்பட்டவர்களுக்கு நாம் மெய்யான மேய்ப்பர்களாகுவோமாக.*

ரப்பட்டு, மிக எப்போதாவது வெளிப்ப டுத்தப்படுகிறது.

சீனாய் மலையிலிருந்து நமது காதுகளில் முழக்கமிடுகிறது: "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக." (யாத்திராகமம் 20:12), பின்னர் அதே தேவனிடமிருந்து கட்டளை வருகிறது: "அன்பில் ஒன்றுசேர்ந்து வாழுங்கள்." (கோ.உ 42:45).

### கர்த்தரின் மாதிரியைப் பின்பற்றுங்கள்

ஜெபிக்க முழங்கால்படியிடுங்கள். சேவை செய்ய முன்னுக்கு வாருங்கள். காப்பாற்ற நாடுங்கள். ஒரு வீட்டை ஒரு குடும்பமாக்கவும் ஒரு குடும்பத்தை ஒரு பரலோகமாக்கவும் தேவனின் மாதிரியில் ஒவ்வொருவரும் முக்கிய பக்கங்கள்.

நமது வீடுகளிலும் நமது சபை அழைப்புகளிலும் நமக்குள்ள புனித பொறுப்புகளை சரிசமமாக்குவது நமக்கு முக்கியமானது. ஒவ்வொன்றும் முக்கியமானதாயிருப்பதால் நமது குடும்பங்களை நாம் பராமரிப்பதிலும் நமது சபை அழைப்புகளை நிறைவேற்றுவதிலும் நாம் ஞானத்தையும், உணர்த்துதலையும் சரியான தீர்மானத்தையும் பயன்படுத்த வேண்டும். நமது குடும்பங்களை நாம் உதாசீனப்படுத்தக்கூடாது; நமது சபை அழைப்புகளையும் நாம் உதாசீனப்படுத்தக்கூடாது.

திறமையுடன் நாம் கட்டுவோம், குறுக்கு வழி எதையும் நாம் எடுக்காமல் அவரது மாதிரியைப் பின்பற்றுவோம். பின்னர், மற்றொரு கட்டிடம் கட்டுபவரான சாலமோனுக்குத் தோன்றி அவர் சொன்னதைப்போல, கர்த்தரான நமது கட்டிடத்தின் மேற்பார்வையாளர் நமக்குச் சொல்வார்: "நீ கட்டின இந்த ஆலயத்தில் என் நாமம் என்றென்றைக்கும் விளங்கத்தக்கதாக, அதைப் பரிசுத்தமாக்கினேன்; என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கேயிருக்கும்" (1இராஜாக்கள் 9:3). அப்போது நமக்கு பரலோக வீடுகளும் என்றென்றைக்குமுள்ள குடும்பங்களும் இருக்கும் மற்றும் மற்ற குடும்பங்களுக்கும் உதவ, பலப்படுத்த, ஆசீர்வதிக்க நமக்கு சாத்தியமாயிருக்கும்.

இந்த ஆசீர்வாதம் நம் ஒவ்வொருவருக்கும் வர அதிக தாழ்மையுடனும் சிரத்தையுடனும் நான் ஜெபிக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஆமேன்.

#### குறிப்பு

1. பிரதான தலைமையின் கடிதம், பெப்ருவரி 11, 1999; *லியஹோனா*, டிசம்பர் 1999, 1 பார்க்கவும்.

## குடும்பம்

# உலகிற்கு ஓர் பிரகடனம்

பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்துவின் சபையின் பிரதான தலைமையும் அப்போஸ்தலர்களின் பன்னிருவர் குழுமமும்

[illegible]